ஸ்பெஷல், நட்ஸ், வனிலா
புருட்சலட் ஐஸ்கிறீம், கிறீம்
சர்பத் ஆகியவற்றைச்
சுவைத்து மகிழ்ந்திட
ராஜா குளிர்
சுவையகம்
(ராஜா கிறீம் ஹவுஸ்)
36, சந்தோஷம் தெரு,
யாழ்ப்பாணம்.
(சி/538)

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 02 வியாழக்கிழமை (16 – 03 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 109

தரமான சுவையான
ஐஸ்கிறீம், குளிர்பானங்கள்
மற்றும்
சிற்றுண்டி வகைகளை
புசித்து இன்புற
ராஜா குளிர்
சுவையகம்
(ராஜா கிறீம் ஹவுஸ்)
36, சந்தோஷம் தெரு,
யாழ்ப்பாணம்.
(சி/538)

# சமாதானம் பேசிக்கொண்டு யுத்த முஸ்தீபு:
# அரசின் இப்போக்கு பேச்சு தொடர உதவாது!

## வெகுஜன அமைப்பு பிரதிநிதிகளின் மத்தியில் தமிழ்ச்செல்வன் உரை

யாழ்ப்பாணம், மார்ச் 16

ஒரு புறம் சமாதானம் குறித்து பேசிக் கொண்டு மறுபுறத்தில் இராணுவ முஸ்திபு நடவடிக்கைகளில் ஸ்ரீலங்கா அரசு ஈடுபட்டிருக்கிறது.

அரசின் இத்தகைய இரட்டை வேடப் போக்கு சமாதானப் பேச்சுக்கள் தொடர்வதற்கு உதவப் போவதில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் நேற்று மாலை யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் வெகுஜன அமைப்புகளின் பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றுகையில் மேற் கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமது அரசியல் அபிலாஷைகளை எட்டுவதற்கு சமாதானப் பேச்சுக்களையும் தமிழர்களின் உரிமைகளையும் கருவியாகப் பயன்படுத்தப்பார்க்கின்றார். இந்தத் தீய நோக்கத்தை அவர் அடைவதற்கு— எம்மை பலிக்கடா ஆக்குவதற்கு — நாம் அனுமதிக்கப் போவதில்லை என்றும் அவர் கூறினார்.

வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத்தின் தலைவர் திரு. சூ சிறில் தலைமையில் நடைபெற்ற மேற்படி சந்திப்பில் உரையாற்றும் போது திரு. தமிழ்ச்செல்வன் மேலும் கூறியதாவது:

ஜனாதிபதியிடமிருந்து எமக்கு இறுதியாக வந்த கடிதத்தின்விவரத்தை நீங்கள் பத்திரிகைகள் மூலம் அறிந்திருப்பீர்கள்.

அந்தக் கடிதத்தில் உள்ள விவரம் நாங்கள் எதிர்பார்க்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## கேதீஸ்வரம் ஆலயத்துக்கு அதிகாரிகள் குழு விஜயம்

கொழும்பு, மார்ச். 16

இந்துக்களின் புனிததலமான திருக்கேதீஸ்வரத்தின் தற்போதைய நிலைமையை நேரில் பார்வையிடுவதற்காக கொழும்பில் இருந்து அதிகாரிகள் குழு ஒன்று நேற்று அங்கு விஜயம் செய்ய இருந்தது.

இந்து கலாசார அமைச்சின் சார்பில் சில அதிகாரிகளும், திருக்கேதீஸ்வரத் திருப்பணிச் சபையின் உறுப்பினர்களும் அக் குழுவில் இடம் பெற்றிருந்தனர். (ஒ-ஐ)

## ஈழத் தமிழர்கள் இருவர் புதுடில்லியில் கைது

### புலிகளுடன் தொடர்புள்ளவர்களாம்

கொழும்பு, மார்ச் 16

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இலங்கையைச் சேர்ந்த தமிழர் இருவரை புதுடில்லியில் உள்ள விசேட பொலீஸ் பிரிவினர் கைது செய்துள்ளார்கள்.

இவர்களிடமிருந்து இந்தியக் கடவுச் சீட்டையும் 40 ஆயிரம் ரூபாவையும் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர். தயாபரன் சிவசாமி என்ற கொழும்பு வெள்ளவத்தை வாசியும், யாழ். நல்லூரைச் சேர்ந்த மயூரதாஸ் ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

தயாபரன் முன்னர் வேலணை நீதிமன்றத்தில் எழுதுவினைஞராக பணிபுரிந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-4)

### உண்ணா விரதிகளைச் சந்தித்து

## பெற்றோரின் கடிதத்தை கையளித்தார் ஆயர்

யாழ்ப்பாணம், மார்ச். 16

உண்ணாவிரதம் இருந்து வரும் சிங்கள யுத்தக் கைதிகளை யாழ் வந்துள்ள அங்கிலிக்கன் திருச்சபையின் பேராயர் அதிவண. கெனத் பெர்னான்டோ பேராசிரியர் ஜெயதேவ, உயங்கொட சார்ஸ் அபயசேகர சகிதம் சென்று பார்வையிட்டார்.

யுத்தக் கைதிகளின் பெற்றோர்கள் சேர்ந்து அவர்களுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றையும ஆயர் கைதிகளிடம் கையளித்தார்.

உண்ணாவிரதிகளைப் பார்வையிட்ட ஆயர் கைதிகளின் விடுதலை தொடர்பாக அரசுடன் பேசி நடவடிக்கை எடுபப்தாகவும் உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறும் அவர்களிடம் கேட்டுக் கொண்டார். ஆனால் உண்ணாவிரதிகள் அதனை நிராகரித்து

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் பிரமுகர்களுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம் மார்ச் 16

யாழ்ப்பாணம் வந்துள்ள அங்கிலிக்கன் ஆயர் கென்னத பெர்னான்டோ, கலாநிதிஜெயதேவஉயங்கொட, "மேர்ஜ்" இயக்கத்தலைவர் சார்ள்ஸ் அபயசேகரா ஆகியோர்இன்று காலை 10 மணிக்கு தமிழீழ

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ஐவன், தராக்கி ஆனந்தி யாழ் வருகை

யாழ்ப்பாணம், மார்ச். 16

ராவய ஆசிரியர் விக்டர் ஐவன், பி. பி. ஸி. செய்தியாளர் ஆனந்தி சூரியப்பிரகாசம், "ஐலண்ட்" செய்தியாளர் தராக்கி ஆகியோர் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

கிளாலி ஊடாக நேற்று இரவு இவர்கள்இங்கு வந்து சேர்ந்தனர். (உ-3)

## உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு சிங்களக் கைதிகளிடம் கோரிக்கை

### வெகுஜன ஒன்றியம் விடுத்தது

யாழ்ப்பாணம், மார்ச் 16

உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் போர்க் கைதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

உண்ணாவிரதத்தின் புனிதத் தன்மையை புரிந்து கொள்ள முடியாத ஸ்ரீலங்கா அரசை நம்பி நீதியான தீர்வை எதிர்பார்த்து ஏமாந்து போய்விடாதீர்கள். உடனடியாக உண்ணா விரதத்தை கைவிடுக. இவ்வாறு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நேற்று மாலை 4 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் இவ்வாறு ஏகமனதாக தீர்மானம் எடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

அத்துடன் இவ்வேண்டுகோள் அடங்கிய கடிதத்தை யுத்தக் கைதிகளுக்கு கையளிப்பதென முடிவு செய்யப்பட்டது. (ஓ-7)

### லண்டன் புறப்படுமுன் கோபன்ஹேகனில்

## விமானத்தை சோதனை செய்த பின்னரே ஏறினார் சந்திரிகா!

கொழும்பு, மார்ச் 16


லண்டன் செல்வதற்காக கொபன்ஹேகன் விமான நிலையத்திற்குச் சென்ற ஜனாதிபதி சந்திரிகா, அவர் பயணம் செய்யவிருந்த விமானம் பூரண சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே, பயணத்தைத் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

"விமானம் சோதனையிடப்பட வேண்டும் அதற்கு முன்பு விமானத்தினுள் ஏறப் போவதில்லை" என்று ஜனாதிபதியின் பாதுகாப்பு அதிகாரிகள் மறுத்து விட்டனர் என்றும் —

அதனை அடுத்து விமான நிலைய அதிகாரிகள் விமானத்தைச் சோதனையிட்டனர் என்றும் —

அதன் காரணமாக சுமார் 40 நிமிடங்கள் கழித்தே ஜனாதிபதி சந்திரிகா லண்டன் பயணத்தை மேற்கொண்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-ஐ-எ)

### முச்சந்தி முரளி



அப்ப .. தெற்கிலை திரும்பவும் சூடு பிடிக்கப் போகுது எண்டு சொல்லுறீகோ... ..!

## தமிழர் அன்றாடப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு வலியுறுத்தினேன்

### சந்திரிகாவுடன் பேசியது குறித்து திலகர்

லண்டன், மார்ச் 16

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசு முழு மூச்சுடன் செயற்பட வேண்டும் என்றும் —

அதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்தி அவற்றைத் தீர்த்து வைக்க வேண்டும் என்றும்—

ஜனாதிபதி சந்திரிகாவிடம் நான் வலியுறுத்தினேன்.

இவ்வாறு பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார் விடுதலைப் புலிகள் பிரமுகர் லோறன்ஸ் திலகர்.

திரு திலகர் கடந்தஞாயிற்றுக்கிழமை கோபன் ஹேகனில் வைத்து ஜனாதிபதி சந்திரிகாவுடன் அரை மணி நேரம் பேசியது தெரிந்ததே.

தமது சந்திப்புக் குறித்து அவர் மேலும் கூறியதாவது!-

இரு சாராரும் நம்பிக்கையை வளர்த்துக் கொண்டு பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதன் மூலம் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்ற நம்பிக்கை சந்திப்பின்போது வலியுறுத்தப்பட்டது.

அரசாங்கம் ஒரு தலைப் பட்ச முடிவுகளை எடுத்தும், செயற்பட்டும் வருவதைத் தவிர்த்து இருபக்க உடன்பாட்டுடன் செயற்படுவதே நல்லது— என்று ஜனாதிபதியிடம் தெரிவித்தேன்

பேச்சுவார்த்தைகளை [தடங்கலின்றி] எவ்வாறு தொடர்வது என்பது குறித்தே அதிக நேரம் பேசினோம்.

தமிழர்களின் அன்றாடப் பிரச்சினைகள், அரசியல் பிரச்சினைகளை விடுதலைப் புலிகளுடன் பேசித்தான் தீர்க்கமுடியும் அரசும் புலிகளும் தொடர்ந்தும் பேசுவதன் மூலமே தீர்வை எட்ட முடியும் என்று எடுத்துக் கூறினேன்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

### கடந்த ஞாயிறன்று கைது செய்யப்பட்ட

## சுழிபுரம் மீனவர்கள் இருவரும் படையினரால் தாக்கப்பட்டு விடுதலை

வடமராட்சி, மார்ச் 16

சுழிபுரம் கவுக்கடி கடற்பரப்பில் கடந்த 12ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு கைது செய்யப்பட்ட இரு மீனவர்களும் நேற்று மாலை விடுவிக்கப்பட்டனர்.

ஆண்டிஐயா தங்கராசா (30 வயது), வைத்திலிங்கம் உதயகுமார் (28வயது) ஆகிய இருவருமே விடுதலை செய்யப்பட்டவர்களாவர். இவர்கள் சுழிபுரம் ஐயனார் கோவிலடியைச் சேர்ந்தவர்கள். இம் மீனவர்களின் இயந்திரப்படகும், வலைகளும் படையினரால் திருப்பி ஒப்படைக்கப் படவில்லை.

விடுதலையான இவர்களது முகம், மூக்கு, உதடுகள் என்பன வீக்கமடைந்திருந்தது டன், ஒருவருக்கு உதட்டில் காயமும் காணப்பட்டது.

சாரத்துடன் மட்டுமே அவர்கள் காணப்பட்டனர். அத்துடன் களைப்படைந்த நிலையில் இருந்தனர்

படையினர் தமிழிலும், சிங்களத்திலும் பேசி இவர்களை கடுமையாக தாக்கியதாகவும் பின்னர் காங்கேசன்துறையில் வைத்து விடுவிக்கப்பட்டதாகவும் அவர்கள் இருவரும் உதயனுக்குத் தெரிவித்தனர்.

சீடான்ஸர் கப்பலில் காங்கேசன்துறையில் வைத்து ஏற்றப்பட்ட இவர்கள் பருத்தித்துறையில் இறக்கப்பட்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் அவர்களது இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (ஓ-173)

## தென் பகுதியில் பல இடங்களில் ஆயுதங்கள், வெடிப்பொருள்கள் மீட்பு!

### ஜே.வி.பி. நடவடிக்கைகள் குறித்து சந்தேகம்

கொழும்பு, மார்ச் 16

தென்பகுதியில் கடந்த சில நாட்களாக பெருமளவு ஆயுதங்களும், வெடிமருந்துகளும் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறிப்பாக அம்பாந்தோட்டை, அம்பலாந்தோட்டை, ஹுங்கம, தங்கல்லை பொலீஸ் பகுதிகளில் இருந்தே இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும், வெடிமருந்துகளும் ஜே. வி. பியினர் முன்னர் மேற்கொண்ட வன்முறைகள் அடக்கி ஒடுக்கப்பட்டதை அடுத்து அவர்களினால் மறைத்து வைக்கப்பட்டவையா அல்லது—

புதிதாக இளைஞர்களினால் சேகரிக்கப்பட்டவையா என்ற சந்தேகம் பொலீஸார் மத்தியில் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீரகெட்டிய பொலீஸாருக்கு கடந்த ஞாயிறன்று கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து ஹக்குருவெலி ஹேன

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 'மகரயாழ்'விருதுபெறுபவர் விவரம் இன்று அறிவிப்பு

### கம்பன் கழக அறிஞர் குழு கூடுகிறது

யாழ்ப்பாணம்,மார்ச் 16

அகில இலங்கை கம்பன் கழகம் வழங்கும் "மகர யாழ் விருதை" பெறுபவரை தெரிவுசெய்வதற்காக கம்பன் கழக அறிஞர் குழு இன்று காலை கழகத்தில் கூடுகின்றது.

இன்று கூடும் கம்பன் கழக அறிஞர் குழுவில் ஆசிரியர் திரு.க.சிவராமலிங்கம், இலக்கணவித்தகர் இ. நமசிவாய தேசிகர் யாழ். பல்கலைக் கழககலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை, மருத்துவபீட சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் எஸ். நச்சினார்க்கினியர் ஆசிரியர் சொக்கன் [illegible] யோரோடு கம்பன்கழக உறுப் [illegible]

இவ்விருதுக்கு தெரிவு செய்யப்படுவோருக்கு ஒரு லட்சம் ரூபா பணமும், தங்கப் பதக்கமும், மகர யாழ் விருதும் இவ்வாண்டு கம்பன் விழா முதல் நாள் நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் க. குணரத்தினத்தினால் வழங்கப் படும்.

1993 ஆம் ஆண்டு மகர யாழ். விருது டாக்டர் எஸ். சிவகுமாரனுக்கும் 1994 ஆம் ஆண்டு மகர யாழ் விருது யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் எஸ். துரைராஜாவுக்கும் வழங்கப்பட்டது தெரிந்ததே.

இவ்வாண்டு இவ்விருது பெறுவதற்கு தெரிவு செய்யப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## றோஹணவின் மைத்துனர் லண்டனில் தடுத்துவைப்பு

கொழும்பு, மார்ச். 16

ஜே. வி. பி. இயக்கத்தின் முக்கியஸ்தரான டாக்டர் சுபாஷ் சந்திரா பெர்னான்டோ பிரிட்டிஷ் குடிவரவு அதிகாரிகளினால் லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அகதி அந்தஸ் துகோரியுள்ள அவர் எந்நேரமும் நாடு கடத்தப்படலாம் என அரச சார்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜே. வி. பி. அணிகளில் ஒன்றின் முக்கியஸ்தரான இவர் இலங்கைக்கு விஜயம் செய்துவிட்டு லண்டன் திரும்பியபோது கைதுசெய்யப்பட்டார் என்றும் —

மிகவும் கடுமையாக நோய் வாய்ப்பட்டிருக்கும் தனது தாயாரைப் பார்க்கவும், தனது சகோதரர் பற்றி விசாரிப்பதற்காகவும் தாம் இலங்கை சென்றதாக அவர் கூறியுள்ளார்.

டாக்டர் சுபாஷ் சந்திரா பெர்னான்டோ றோஹண விஜேவீரவின் மனைவியின் சகோதரராவர். (ஒ-ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். வண் கிழக்குக் கலட்டி
அருள்மிகு ஸ்ரீ விரகத்திப்பிள்ளையார் கோயில்

## இலக்ஷார்ச்சனைப் பூர்த்திவிழாவும் மஹாநவோத்திர மஹாசங்காபிஷேகமும்

பங்குனி 2ஆம் நாள் வியாழன் (16 – 03 – 1995) மாலை கிரியாரம்பம்

மாலை 5-00 மணிக்கு
சங்குஸ்தாபனம், சங்குப்பூஜை, ஹோமம், வேத ஸ்தோத்திரபாராடணம், தேவாரபாராயணம், ஆசீர்வாதம், விபூதிப் பிரசாதம் வழங்கல்,

பங்குனி 3ஆம் நாள் பங்குனி உத்தரம் (17 – 03 – 1995) வெள்ளி

காலை 5-00 மணிக்கு
யாகபூஜை, சங்குப்பூஜை, விசேட திரவிய ஹோமம், விஷேட திரவிய அபிஷேகம், பூர்ணாகுதி தீபாராதனை, கும்பவீதிப்பிரதக்ஷணம், சங்காபிஷேகம், விஷேட பூஜை, விபூதிப்பிரசாதம் வழங்கல்.

மாலை 6-00 மணிக்கு
வசந்த மண்டப விஷேட தீபாராதனைப் பூஜை, இலக்ஷார்ச்சனை நிறைவு, சுவாமி வீதி உலா

★ சங்காபிஷேக பிரதம சிவாச்சாரியார்:
சிவஸ்ரீ து. விவேகானந்தக் குருக்கள்

இங்ஙனம்:
ஆதீனகர்த்தா து. விவேகானந்தக் குருக்கள்

அன்பளிப்பு:
✶ கோபிகா ஆடையகம் ✶
4, சிறப்பு அங்காடி, யாழ்ப்பாணம்.
[8388]



## PROGRESS OF PEACE NEGOTIATIONS

An exchange of views (in English) on the above subject with a

**Good – will team from the South**

consisting of Rev. Kenneth Fernando
(Anglican Bishop in Colombo),
Dr. Jeyadeva Uyangoda
(Colombo University)
and
Mr. Charles Abeyasekera (MIRJE)
will be held today
(Thurs lay) 16th March 1995 at 4-00 p.m at the

**CENTRE FOR BETTER SOCIETY**
**115, 4th Cross Street, Jaffna.**

**ALL ARE WELCOME**

**Fr. S. J. EMMANUEL**
**Director**

(35712)



ஓம் விராட் விஷ்வப்ரமணே நம

## பதினொராம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**விஷ்வஸ்ரீ பொ. கந்தையாப்பத்தர்**
(வாய்க்கால் கந்தையாப்பத்தர்)

மலர்வு: 29 – 06 – 1894
உதிர்வு: 16 03 – 1984
திதி: 16 – 03 – 1995

அன்னையின் மடியில் பிஞ்சாகப் பிறந்து
நூறாண்டு காலம் ஆகும்
அருளான இறையடி சேர்ந்து இன்று
ஆண்டுகள் பதினொன்று ஆகும்
அன்பான எங்கள் விஷ்வக்கு குலத்தில்
நீங்கள் கண்கண்ட தெய்வமாகும்
அமிழ்தாகி எங்கள் உயிராகி நெஞ்சில்
நீங்காத நினைவை என்றும் மறவாத;

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
கொப்பாட்டப்பிள்ளைகள்.

671/1, கே. கே. எஸ். வீதி,
பூநாறி மரத்தடி,
யாழ்ப்பாணம்.
[35714]


## இந்து தர்மம் வெளியீட்டு விழா

இந்து சமயப் பேரவையின் மாதாந்த ஆத்மீக சஞ்சிகையான 'இந்து தர்மம்' பங்குனி மாத இதழ் வெளியீட்டு விழா இன்று வியாழக் கிழமை முற்பகல் 11 மணிக்கு சுன்னாகம் ஐயனார் கோயிலில் நடைபெறும்.

ஆத்மஜோதி நா. முத்தையா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் வெளியீட்டுரையை யாழ். மாநகர ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கமும், அறிமுகவுரையை யாழ். பல்கலைக் கழக இந்து நாகரிகத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. மா. வேதநாதனும் வழங்குவர். (ஐ–14)

## இன்று

''கந்தபுராணக் கவியமுதம்'' எனும் பொருளிலான சொற்மொழிவு ஒன்று யாழ். கந்தர்மடம் வேதாந்த மடத்தில், இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு நடைபெற உள்ளது.

ஓய்வு பெற்ற அதிபர் திரு. க. சி. சண்முகம் அதில் உரையாற்றுவார். (ஐ–எ)

★ ★ ★

மட்டுவில் வடக்கு மோகனதாஸ் சனசமூக நிலைய நூலக சேவையினரால் நடத்தப்படும் மாதாந்த அறிவியலரங்கும், கலை நிகழ்வும் இன்று வியாழன் இரவு 8 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளன. [ஐ–31]

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

1993/94 கல்வியாண்டிற்கு மேலதிகமாக பௌதீக விஞ்ஞானம், விவசாய விஞ்ஞானம் ஆகியவற்றிற்கு வெற்றிடம் நிரப்பும் பட்டியல்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் அனுப்பப்பட்டு யாழ். பல்கலைக் கழக விளம்பரப் பலகையில் இடப்பட்டுள்ளது.

இக்கற்கை நெறிகளிற்கு தெரிவு செய்யப்பட்டவர்களிற்கு மானிய ஆணைக் குழுவால் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. உரியவர்கள் 21 – 04 – 1995ற்கு முன் தம்மை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலதிக விவரங்களை பரீட்சைக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

–பதிவாளர்
[சி/767]

## ஆலயங்களில்

சாவகச்சேரி, நுணாவில் கிழக்கு ஸ்ரீ கந்தசுவாமி ஆலய இரதோற்சவம் நாளை வெள்ளிக்கிழமையும், தீர்த்தோற்சவம் மறுநாள் சனிக்கிழமையும் இடம்பெறும். இவ்வாலய வருடாந்த மகோற்சவம் கடந்த 8 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றது. (இ–14–117)

★ ★ ★

கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலயத்தில் கடந்த 7 ஆம் திகதி முதல் நடைபெற்று வரும் இலட்சார்ச்சனை வைபவம் இன்று வியாழக்கிழமை, 64 விசேட உபசார பூசை வழிபாட்டுடன் நிறைவு பெறும். (இ–14–30)

★ ★ ★

வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரஸ்வாமி ஆலய பஞ்சரதாரோகணம், இன்று வியாழக்கிழமையும் தீர்த்தோற்சவம் நாளை வெள்ளிக்கிழமையும் நடைபெறும். தொடர்ந்து சனிக்கிழமை பூங்காவனம் இடம்பெறும். (இ–14)

★ ★ ★

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய ரதோற்சவம் இன்று வியாழக்கிழமையும் தீர்த்தோற்சவம் நாளை வெள்ளிக் கிழமையும் இடம்பெறும். (இ–14)

★ ★ ★

வளன்புரம், கொழும்புத்துறை புனித சூசையப்பர் ஆலய வருடாந்த திருவிழா இன்று மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 3 நாட்கள் ஆயத்த ஆராதனைகள் நடைபெறும்.

19 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 5–15 மணிக்கு முதற் திருப்பலியும், காலை 6-30 மணிக்கு திருநாள் கூட்டுத் திருப்பலியும் நிறைவேற்றப்படும். (ஐ–14)

★ ★ ★

நல்லூர் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் பௌர்ணமி தீப இசை அரங்கு இன்று மாலை 6 30 மணிக்கு நடைபெறும். இன்றைய இசையரங்கை பிரம்மஸ்ரீ உமாரமணசர்மா வழங்குவார். (ஐ)

## பறக்கும் தட்டு ஆராய்ச்சி நிலையம்

கொழும்பு, மார்ச் 16
உலகிலேயே மிகப் பெரிய ''பறக்கும் தட்டு'' ஆராய்ச்சி நிலையம் ஒன்று ஜப்பானில் நிறுவப்பட்டுள்ளது.

இந் நிலையம் ஜப்பானின் 'ஹகுயி' நகரில் மிகப் பிரம்மாண்டமான முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

'பறக்கும் தட்டு' ஒன்றும் அங்கு தயாரிக்கப்பட்டு வருகிறது. அது அடுத்த ஆண்டில் அறிமுகப்படுத்தப்படும். (ஐ·5)

## அகதிகள் சென்ற படகுகள் திருப்பி ஒப்படைக்கப்படும்

கொழும்பு, மார்ச் 16
தமிழகத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழ் மீனவரின் சுமார் 170 படகுகள் இந்திய அதிகாரிகளால் விரைவில் திருப்பி ஒப்படைக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமான ஏற்பாடுகளைக் கவனிக்க ஐ. நா. அகதிகள் தூதரக அதிகாரிகள், இலங்கைக் கடற்றொழில் அமைச்சு அதிகாரிகள் மற்றும் பொறியியலாளர்கள் அடங்கிய குழு ஒன்று இம்மாத இறுதியில் சென்னைக்குச் செல்ல இருக்கின்றது.

திருகோணமலை, மன்னார் பகுதிகளைச் சேர்ந்தவர்களின் படகுகளே தமிழ் நாட்டில் தடுத்துவைக்கப்பட்டுள்ளன. [இ-எ]

## செய்முறை பரீட்சைகள் சனியன்று

யாழ்ப்பாணம், மார்ச். 16
கடந்த ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சையின் நடனம், சங்கீதம் ஆகிய பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சை — வலயம் ஒன்றைச் சேர்ந்த பரீட்சார்த்திகளுக்கு —நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை பாடசாலை அதிபர்கள்நாளையதினம் கோட்டக்கல்வி அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம் என்று வலயம் ஒன்றின் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

## பாடசாலைகளில்

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய இல்லமெய் வல்லுனர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் திரு. பொ. செல்லையா தலைமையில் நடைபெறும். (ஐ–117)

★ ★ ★

நெல்லியடி மெதடிஸ் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டி இன்று பிப 2 மணிக்கு அதிபர் திரு வ. கணேசமூர்த்தி தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக 2 இன் கல்விப்பணிப்பாளர் திரு க. கந்தசாமி கலந்து கொள்வார். (ஒ)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 16
வட்டுக்கோட்டை— யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை மாலை5-00மணிக்கு கல்லூரியில் நடைபெறும்.

இவ்விழாவில் பிரதம விருந்தினர்களாக யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் கலாநிதி என். எதிர்வீரசிங்கம், 'கிறீன்' ஞாபகார்த்த மருத்துவமனை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் திருமதி சந்திரா அம்பலவாணர் ஆகியோர் கலந்துகொண்டு, பரிசில்களை வழங்குவார்கள். (ஐ–14–161)

## திறப்பு விழா

'அகவொளி' குடும்ப வளத்துணை நிலையம் இன்று காலை 9 மணிக்கு குருநகர் பாஷையூர் வீதிப்பகுதியில் திறந்துவைக்கப்படும்.

இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராக யாழ் ஆயர் கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை கலந்து கொள்வார். இந்நிலையத்தை ஆயர் நாடாவை வெட்டி திறந்துவைப்பார். [ஒ-7]


மானிப்பாய் கோவிற்பற்று
லயன்ஸ் கழக

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

**12 – 3 – 95**
அதிர்ஷ்ட இலக்கங்கள்

1 ஆம் பரிசு இல. 0339 2 ஆம் பரிசு இல. 1385

ஆறுதல் பரிசில்களுக்கான இலக்கங்கள்
1431 0813 0839

பரிசில்களுக்கு உரியவர்கள் தங்கள் சீட்டுக்களை 12- 04- 95 இற்கு முன் சமர்ப்பித்து பரிசில்களைப் பெற்றுக்கொள்ளவும்.

இ. சிவயோகன்
செயலாளர்

''முருக நிழல்''
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்
(35720)



## அறிவித்தல்

கொக்குவில் மேற்கு மணியர்பதி இந்து இளைஞர் மன்றத்தினால் நடாத்தப்பட்ட சைவ சமயப் பாடப் பரீட்சையில் பரிசு பெறுவோர் விவரங்களை பரீட்சார்த்திகள் 17- 03- 1995 வெள்ளிக்கிழமை தங்கள் பாடசாலைகளிலும், மணியர்பதி – ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்திலும், பார்வையிடலாம். 18- 03- 1995 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு பரிசளிப்பு விழா மேற்படி ஆலய முன்றலில் நடைபெறும்.

செயலாளர்
இந்து இளைஞர் மன்றம், கொக்குவில் மேற்கு
(35725)



உ

## கோலப் போட்டி

நல்லை ஆதீனத்தில் திருநெறியத்தெய்வீக மாநாடு நடைபெறுவதை முன்னிட்டு எதிர்வரும் 22 – 04 – 95 கோலப்போட்டி நடைபெறவுள்ளது. பங்குபற்ற விரும்புவோர் 10. 04. 95 திகதிக்கு முன்னர் தங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். 15. 04. 95- 16. 04. 95 திகதிகளில் பி. ப 2. 00 — 4. 00 மணி வரை மேற்படி ஆதீனத்தில் போட்டி பற்றிய விதிமுறைகளையும் கட்டெண்ணையும் பெற்றுக் கொள்ளவும்.

11 — 15 வயது வரை மத்திய பிரிவு
16 — 20 வயது வரை மேற்பிரிவு
20 — வயதிற்கு மேற்பட்டோர் அதிமேற்பிரிவு

இவற்றைக் குறிப்பிட்டு பெயர், முகவரி, பிறந்ததிகதி ஆகியவற்றுடன் விண்ணப்பிக்கவும்.

(35723) –ஆதீனகர்த்தா



கரவெட்டி, இராசகிராமம்
சிறுவர் போசாக்குப் பராமரிப்பு பூங்கா
வளர்ச்சி நிதிக்கான

## மாபெரும் கலைவிழா

காலம் : இன்று (16 – 03 – 95) இரவு 7–00 மணி
இடம் : நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

கலை நிகழ்ச்சிகள்
ஒரே இடத்தில் சம நேரத்தில் மூன்று மேடைகளில்
தமிழீழக் கலைஞர்களால் உருவாக்கப்பட்ட
★ ராஜன், அருணா, சாந்தன் ★
இசைக் குழுவினரின்
பாடகர்கள்: திவாகர், ஜே ஆர். சுகுமார், எஸ். ஜி. சாந்தன்
போராளிகள்: சிட்டு, செங்கதிர்
ஆகியோர் இணைந்து வழங்கும்

★ **"இன்னிசை கானமழை"** ★
★ **கலை நிகழ்ச்சியும்** ★

இவற்றுடன்
கோப்பாய் சுதேசிய கலா மன்றம் வழங்கும்
''அவள் ஒரு மாதிரி'' ''ஆவினில் இனியவள்''
ஆகிய இரு நாடகங்களும் நடைபெறவுள்ளன

இக்கலை விழாவில் அனைவரையும் வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஒலி அமைப்பு
கலைமதி சவுண்ட் சேவிஸ்
நெல்லியடி.

ஒளி அமைப்பு
மனோ ஒளி அமைப்பாளர்
கோப்பாய்.

கலை விழா ஏற்பாட்டுக் குழு,
சிறுவர் போசாக்கு பராமரிப்புப் பூங்கா,
இராசகிராமம், கரவெட்டி.
[35721]



உ
விராட் விஸ்வப் பிரம்மணே நம

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 16 – 09 – 1993
மறைவு: 14 – 02 – 1995

**செல்வன் பானுதன் செல்வராசா**

ஈடிலா எமதருமைச் செல்வமே!
மாற்றோரின் வேதனைக்கு மாற்றுவழியாய்
வந்தாய் பானுதனே
சித்தப்பாவிற்கு ஒரு அருமைப் புதல்வன்
வந்துவிட்டான் என்று இங்கிருந்து
நாம் அகமகிழ்ந்தோம் நிழற்படத்தில் உன் அழகிய
வதனம் கண்டு பூரித்து நின்றோம்
ஓடோடி வந்து உனை வாரிஅணைத்திட
ஆவலாய் இருந்த வேளையில்
உன் பொன்மேனியில் பொல்லாத நோய் வந்துவிட்ட
சேதிஅறிந்து கதிகலங்கி நின்றோம்
உன் உயிரை மீட்டிடலாம் என்றெண்ணி
உனைப் பெற்றவர்கள் கடல்கடந்து
கொழும்பு வந்தும் உனையிழந்து தவிக்கின்றோம்
காலன்தான் வந்தானோ!
பாலனுனைக் கவரவென்று. என்றும் உன் நினைவு
மாறாது, மறையாது.

16-03-1995 அன்றைய 31ஆம் நாள் நினைவில் எங்கள் அன்புத் தளிரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்
ந. பகிரதன் (லிபியா)
ந. சயந்திரன் (டென்மார்க்)
உன் உடன்பிறவாச் சகோதரர்களும்,
குடும்பத்தினரும்.

அம்மன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
(35772)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்த பேரினவாத சக்திகளை விட்டு விலகினாலே வெற்றி கிட்டும்!

## ஐ. தே. க. கூட்டத்தில் ஹமீத் ஆவேச உரை!!

கொழும்பு, மார்ச் 16

பௌத்த பேரினவாத ஆதரவு சக்திகளிடமிருந்து ஐக்கிய தேசியக்கட்சி விலகிச் செல்லாத பட்சத்தில் எதிர்காலத் தேர்தல்களில் வெற்றியீட்டும் எண்ணத்தை கட்சி கைவிடவேண்டியதுதான்.

ஐ.தே.க. தவிசாளரும் முன்னாள் அமைச்சருமான ஜனாப் சாகுல் ஹமீத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த வாரம் நடைபெற்ற ஐ.தே.க. நிறைவேற்றுக் குழுக்கூட்டத்தில் அவர் இக்கருத்தை வெளியிட்டார்.

டி.பி. விஜேதுங்கா காலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட சிங்கள பேரினவாத ஆதரவுப் போக்கை அவர் கண்டித்தார்.

ஹமீதின் இப் பேச்சுக்கு பல சிங்கள எம்.பிக்கள் கண்டனம் தெரிவித்தனர்.

கடந்த காலங்களில் கட்சியில் எவரும் சிறுபான்மையினருக்கு விரோதமான போக்கை கையாளவில்லை என்று அவர்கள் தெரிவித்தனர்.

முன்னாள் அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ எழுந்து, ஹமீது தெரிவித்த குற்றச்சாட்டு பிழையானது என்றார்.

ஆத்திரமடைந்த ஹமீது, பொறுமையிழந்து,—

முன்னாள் ஜனாதிபதி விஜேதுங்காவின் 'மரமும் கொடியும்' பேச்சை நினைவுபடுத்தினர்.

'பௌத்த சிங்கள பேரினவாதப் போக்கை விஜேதுங்காவின் பேச்சு ஏற்படுத்தியதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். இது தான் எனது வாதமாகும்''— என்றார் ஹமீது, மேசையில் ஆத்திரமாக குத்தியபடி.

''தனிப்பட்ட எம். பி. எவரையும் நான் தாக்கிப் பேசவில்லை. கடந்த காலத் தவறுகளை கட்சி கைவிட வேண்டும் என்பது தான் என் வேண்டுகோள்'' — என்றார் அவர்.

இவ்விவாதத்தின்போது, ஜனாப் ஹமீது —

''இந்த நாட்டின் அரசியல் சரித்திரத்திலேயே முதல் தடவையாக, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இருந்த சிறுபான்மையினரின் ஆதரவைப் பெறுவதில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஜனாதிபதி சந்திரிகாவின் தலைமைத்துவத்தின்கீழ் வெற்றி அடைந்தது''— என்றார்.

இந்தச் சவாலை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்கொள்ளு முகமாக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் சிபார்சுகளை நாட்டின் நலன்கருதி ஆராய வேண்டும்; கட்சியின் லாபம் கருதி ஆராயக்கூடாது என்றார் அவர்.

ஜனாப் ஹமீதுவின் இக் கருத்தை எல்லா எம். பிக்களும் ஏற்றுக் கொண்டனர்.

இக்கூட்டத்தில் டாக்டர் ராஜிதா சேனரத்னா, ''அதிகாரப் பரவலாக்கலில் இடம்பெற வேண்டியவை பற்றி தீர்மானிக்க வேண்டியவர் திரு. பிரபாகரன் தான். ஆகவே அதிகாரப் பரவலாக்கல் பற்றி ஐக்கிய தேசியக் கட்சி ஒரு நிலைப்பாடு எடுப்பது பிரயோசனமற்றதாகும்' — என்று தெரிவித்தார். [ஐ-எ]

# புதைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் பல மீட்பு!

## திக்வெலவில் சம்பவம்

கொழும்பு, மார்ச். 16

இரும்புப் பெட்டகம் ஒன்றினுள் வைத்து நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் மற்றும் வெடிப்பொருள்கள் என்பவற்றை திக்வெலப் பகுதியில் உள்ள பதிகம என்னும்] இடத்தில் பொலீஸார் கடந்த வாரம் மீட்டுள்ளனர்.

5 துப்பாக்கிகள் மற்றும் 118 தோட்டாக்கள் உட்பட பல கைக்குண்டுகள் என்பனவே இவ்வாறு மீட்கப்பட்டன.

புதிதாக அமைக்கப்படும் வீடு ஒன்றின் அத்திவாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டபோதே, இந்த ஆயுதங்களும் வெடிபொருள்களும் மீட்கப்பட்டன.

இந்த வீடு அமைக்கப்படும் காணி புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

இச்சம்பவம் தொடர்பாக இக்காணியின் முன்னாள் உரிமையாளரை, சந்தேகத்தின் பேரில் திக்வெலப் பொலீசார் கைது செய்துள்ளனர். (ஐ-5)

# அதிருப்தியே பதவி துறக்க காரணம்

கொழும்பு, மார்ச் 16

பொ. ஐ மு. அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ள சமாதான முயற்சியில் அண்மைக்காலத்தில் ஏற்பட்டுள்ள நிலைவரம் காரணமாகவே தாம் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியிலிருந்து விலகுவதாக சட்டத்தரணி ரி. சி. இராஜரத்தினம் அறிவித்துள்ளார்.

இச்சமாதான முயற்சி குறித்து அரசு ஒரு தரப்பான பிரசாரத்தை துவக்கி நடத்தி வருவதாகவும் அவர் தமது பதவி விலகல் கடிதத்தில் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் தமது பதவி விலகல் கடிதத்தை கடந்த 10ஆம் திகதி பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவிடம் கையளித்தார். (இ-எ)

# பாதுகாப்புக்கான நிதிக் குறைப்பு படை நடவடிக்கைக்கு குந்தகம்

## சிரேஷ்ட அதிகாரிகள் ஜனாதிபதியிடம் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 16

பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு இவ்வாண்டில் குறைக்கப்பட்டிருப்பது படையினரின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதாக இருக்கின்றது என்று அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தி உள்ளனர்.

கடந்த வாரம் ஜனாதிபதி சந்திரிகாவை இவ்வதிகாரிகள் சந்தித்துப் பேசியபோது அவர்கள் இதனை சுட்டிக் காட்டினர் என்று ''சண்டே ரைம்ஸின்'' பாதுகாப்புச் செய்தியாளர் தெரிவித்திருக்கிறார்.

படையினர் மற்றும் பொலீஸாரின் நாளந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள பணமிருப்பதாகவும் –

ஆனால் ஆயுதங்களை கொள்வனவு செய்ய குறைந்தளவு பணமே ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அச்சந்திப்பின் போது, நிதிக்கஷ்டத்துடன் படையினர் சண்டையில் ஈடுபடுவதைத் தவிர்க்குமுகமாக தாம் எப்படியாவது போதுமான நிதியை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப் போவதாக ஜனாதிபதி, அமைச்சு அதிகாரிகளிடம் தெரிவித்தார் என்றும் ''சண்டே ரைம்ஸ்'' தகவல் வெளியிட்டுள்ளது. (ஐ-எ)

# சேத விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16

அண்மைக்கால வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் தொடர்பான விவரங்களை யாழ் பிரதேச செயலகம் திரட்டி வருகிறது.

கிராம சேவையாளர்கள் மூலம் விவரம் திரட்டும்பணிகள் தற்போது ஆரம்பமாகியுள்ளன. (5-17)

# புலிகளின் குரல் வானொலியில்

16 — 03 — 1995

வியாழன் இரவு

- ★ 8-01 — சொல்லுங்கள் பார்க்கலாம்
- ★ 8-10 — சித்தமருத்துவ குறிப்புகள்
- ★ 8-20 — உழைப்போம் உயர்வோம் — நிகழ்ச்சியில் 'புதிய உணர்வுகள்' குறுநாடகம்
- ★ 8-30—செய்திகள்
- ★ 8-40 —மொழியும் வாழ்வும்
- ★ 8-50 — தாயகப்பாடல்கள்

17 — 03 — 1995

வெள்ளி காலை

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — மணியாரம்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — தாயகப்பாடல்கள்

# தமிழீழ வானொலி

## ஒலிபரப்பு

வியாழன் மாலை

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிக் கீதம்
- ★ 5-10 புதியவை
- ★ 5-15 — மழலைகளுக்காக
- ★ 5-30 — இசையும் கதையும்
- ★ 6-00— சிந்தனைக்குச் சில விநாடிகள்
- ★ 6-02— பொன்விளையும் பூமி
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — கேள்வி பதில் — விளையாட்டுத் தொடர் பானவை
- ★ 6-25 — என் தெரிவு
- ★ 6-30 - மாலை நிகழ்ச்சிகள் நிறைவுபெறும்.

# தென்மராட்சி ஒய்வூதியர் நலன்புரிச்சங்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

தென்மராட்சி இளைப்பாற்றுவேதனம் பெறுவோர் நலன்புரிச்சங்க பொதுக்கூட்டம் அண்மையில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெற்றது.

சங்கத்தலைவர் திரு. ஆ. ஆறுமுகம் தமது தலைமையுரையில் சங்கத்தின் கடந்த காலச் செயற்பாடுகள் பற்றி விளக்கமளித்தார். சங்க உறுப்பினர் தெரிவும் இடம் பெற்றது. [இ-14]

# ஆஸ்பத்திரிக்கு 'பிக்அப்' வாகனம்

யாழ். போதனாவைத்திய சாலைக்கு மகளிர் விவகார போதனாவைத்தியசாலை அமைச்சு புதிய 'பிக் அப்' வாகனம் ஒன்றை வழங்கியுள்ளது.

யாழ். போதனாவைத்திய சாலைப் பணிப்பாளரிடம் அவ் வாகனம் நேரில் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த வாகனத்தை கப்பலில் யாழ்ப்பாணம் எடுத்து வருவதற்கு வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் செல்வி நவமலர் சனகரட்ணம் நடவடிக்கை எடுத்துள்ளார். [ஒ-7]

# சுகாதாரக் கருத்தரங்கு

சத்திர சிகிச்சையும் அதன் முக்கியத்துவமும் [என்னும் தலைப்பிலான சுகாதாரக் கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். போதனாவைத்திய சாலை தாதியர் பயிற்சிக் கூடத்தில் நடைபெறும்.

யாழ். போதனா வைத்திய சாலைசத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எம். கணேசரட்ணம் கருத்துரை வழங்குவார். [ஐ-14-18]

# செய்முறை பரீட்சை ஒத்திவைப்பு

யாழ் பல்கலைக்கழக வெளிவாரிப் பிரிவில் நாடகமும் அரங்கியலும் பயிலும் மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கு நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த செய்முறைப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அந்தப் பரீட்சை எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 1-30 மணிவரை நடைபெறும். [ஐ-5]

# நெடுங்கேணி பிரதம தபாலக அவல நிலை

நெடுங்கேணி, மார்ச் 16

வவுனியா வடக்கு, நெடுங்கேணி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பிரதம தபாலகம் சீராக செயற்பட முடியாதுள்ளதாக அப்பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இதற்கு ஒரு நிரந்தர கட்டடம் இல்லாமலுள்ளது.

தபால் விநியோகப் பிரிவும் 20 வருடங்களாக மீளாய்வு செய்யப்படவில்லை; இரண்டு தபாலதிபர்களுக்கு பதிலாக ஒருவர் மட்டுமே கடமை புரிந்து வருகிறார்.

பத்து தபால் ஊழியர்கள் செய்யும் வேலையை 7 பேர் மட்டுமே செய்ய வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வாரத்தில் மூன்று நாட்கள் வவுனியாவுக்கு சென்று தபால் பொதிகளை எடுத்து வரவேண்டியுள்ளதால் அந் நாட்களில் தபால் விநியோகம் தடைப்படுகின்றது.

தந்தி விநியோகத்தர் நியமனம் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதால் அவசர தந்திகள், கடுகதி தபால்கள், கடுகதி பதிவுத் தபால்கள் போன்றவற்றின் விநியோகமும் பாதிப்படைந்துள்ளது.

இதேவேளை தபால் ஊழியர்களுக்கு திணைக்களத்தால் வழங்கப்பட வேண்டிய கோலவுடை, மழையங்கி தொப்பி, பாதணி போன்றனவும் வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதி மக்களின் வெளித்தொடர்பு ஊடகமாக தபால் சேவை ஒன்றே உள்ளதால் இதனை சீரமைக்க, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர். (இ-14-109)

# முல்லைத்தீவு நகரில் படையினர் வசம் 14 தமிழர்

## அவர்கள் நிலை பற்றி தகவல் இல்லை

யாழ்ப்பாணம், மார்ச் 16

இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பில் உள்ள முல்லைத்தீவு நகரப்பகுதியில் 14 தமிழர்கள் கடந்த நான்கு வருடங்களாகச் சிக்கியுள்ளதாக தற்போது தகவல்கள் வெளிவந்துள்ளன.

1990ஆம் ஆண்டில் முல்லைத்தீவு நகரம் இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளானது.

அவ்வேளையிலேயே இந்த பதினான்கு தமிழர்களும் இராணுவத்தினரிடம் பிடிபட்டனர்.

பிடிபட்டவர்களில் 9 பேர் பெண்கள்; 4 பேர் வயோதிபர்கள் மற்றும் ஒருவர் சிறுமி.

இவர்களது தற்போதைய நிலை பற்றிய தகவல்கள் எதுவும் பின்னர் தெரியவரவில்லை. (ஐ-5-4)

## பத்திரிகைச் செய்திகளுக்கு

# ஜனாதிபதி செயலகம் மறுப்பு அறிக்கை

கொழும்பு, மார்ச் 16

இராணுவத்தினரின் ஆலோசனையை மீறி அரசினால் வழங்கப்பட்ட சிமெந்தை பயன்படுத்தி விடுதலைப் புலிகள் ''பங்கர்களை'' அமைத்து வருகின்றனர் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா டென்மார்க்கில் கூறியதாக வெளியான செய்திகளை ஜனாதிபதி செயலகம் மறுத்துள்ளது.

''த ஐலண்ட்'', ''திவயின'' ஆகிய பத்திரிகைகளில் இது தொடர்பாக வெளியான செய்திகள் முற்றிலும் பொய்யானவை என்றும்—

உண்மையை திரித்துக் கூறுவனவாக அவை அமைந்துள்ளன என்றும்— நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதான முயற்சிகளை சீர் குலைக்கும் விதத்தில் பொய்யான செய்திகள் பிரசுரிக்கப்படுவதையிட்டு ஜனாதிபதி ஆழ்ந்தகவலை அடைந்திருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

# கம்பன் மகாகவி; அவனின் காப்பியத்தை தவிர்த்து இலக்கிய உலகை நினைத்துப் பார்க்கவே முடியாது

## ''இலங்கை மண்'' பாராட்டு விழாவில் உரை

''புலிகளின் குரல்'' வானொலியில்ஒலிபரப்பாகி வந்த 'இலங்கை மண்' தொடர் நாடகத்தின் கலைஞர்களைப் பாராட்டும் விழாவும், ஆய்வரங்கும் நல்லூர் இளங்கலைஞர் மன்ற கலாமண்டபத்தில் அண்மையில் நடைபெற்றன.

அந்த நிகழ்வில் இடம்பெற்ற முக்கிய உரைகளின் தொகுப்பின் முதல் பகுதி கடந்த செவ்வாயன்று உதயனில் வெளியானது. 2ஆவது பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தமது உரையில் கூறியதாவது:

கம்பன் ஒரு பெரும்புலவன். கம்பராமாயணத்தை விட்டுத் தமிழ் இலக்கிய உலகை நினைத்துப் பார்க்க முடியாது.

ஆரியம் — திராவிடம் என்ற பேதங்கள் கம்பனுக்கு இருந்திருக்க நியாயமில்லை. காப்பிய கவர்ச்சிக்காக சில பாத்திரங்களை குரங்காகப் படைத்தானேயன்றி திராவிடர்களைப் புண்படுத்த வேண்டும் என்ற நோக்கம் அவனிடம் இருந்திருக்கவில்லை.

கம்பனை ஒரு கவிஞனாக பார்க்க மறுக்கும் கருத்துக்கள் ஏற்கமுடியாதவை. கருத்தளவில் கம்பனோடு உடன்படாவிட்டாலும் கம்பன் ஒரு பெருங்கவிஞன் என்பதை நான் ஒப்புக் கொள்வேன்.

இலக்கிய நாயகனாக இருந்த ராமனை தெய்வமாக்க ஒருசிலர் புறப்பட்டதாலேயே அவனை வேறு சிலர் இழிவுபடுத்தத்தொடங்கும் நிலை ஏற்பட்டது

இராமாயணத்தை மாற்றிச் சொல்வதால் கம்பனோடு அக் கதையை ஒப்பிட்டுப் பார்க்கும் நிலையே வளரும்; மண்பற்று வளரும் எனச் சொல்வதற்கில்லை.

எனவே கணேசமூர்த்தி போன்றோர் புதுக் காவியங்கள் செய்ய முன்வரவேண்டும் — என்றார்.

### இராவணனும் ஆரியனே

அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் பேசும்போது கூறியதாவது:

இராவணனும் ஆரியனே! அவன் தமிழன் என்று கூறுவதற்கு சான்று என்ன?

இராமாயணம் நடந்த காலத்துக்கு சரியான வரலாற்றுச் சான்றெதுவும் நம்மிடமில்லை; கிடைப்பவை இலக்கியச் சான்றுகளே. அந்த இலக்கியச் சான்றுகளின்படி இராவணனே ஆரியனாகத்தான் கருதப்படுகிறான்.

அவன் பிரமனின் வழித்தோன்றல் என்பதாலும் — யான் ''அந்தணர் பாவை'' எனச் சூர்ப்பனகை கம்பராமாயணத்தில் குறிப்பிடுவதாலும் —

சிவனால் மலையின் கீழ் அழுத்தப்பட்ட போது இராவணனால் பாடப்பட்டது சாமவேதமே என்பதனாலும் —

இராவணனைக் கொன்றதால் இராமனைப் ''பிரம்மஹத்து தோஷம்'' பிடித்தது என்ற செய்தியாலும் —

''இராவணன் ஆரியனே'' என்றறிய வருகிறது.

ஒரு விடயத்தை நிரூபிக்க காட்சி, அனுமானம், ஆகமம் ஆகிய மூன்று பிரமாணங்களை மேற்கொள்வர்.

மேற்குறிப்பிட்ட விடயத்தில் —

காட்சியளவை பயன்தராது, அனுமான அளவையால் சிந்திக்கும் போது — ''கம்பன் ஆரியரைப் புகழ்ந்து திராவிடரைத் தாழ்த்த வேண்டிய தேவை என்ன? அவன் ஆரியனா? அல்லது ஆரியரை நம்பி வாழ்ந்தவனா? — என்ற கேள்விகள் எழுகின்றன.

இராவணன் திராவிடன்; அவன் வாழ்ந்த நாடு திராவிட நாடு; அவன் தாய்மொழி திராவிட மொழி.

அப்படி இருக்க 'மன்னவனும் நீயோ' என அரசனைக் கேட்கும் ஆளுமையுள்ள கம்பன் காரணமின்றி ஆரியரை உயர்த்தி திராவிடரைத் தாழ்த்த மாட்டான் என்பது தெளிவாகுகிறது.

ஆகமப் பிரமாணம் என வரும்போது கம்பனுக்குப் பின் வந்த அத்தனை புலவர்களும் கம்பனைப் புகழ்ந்து ஏற்றுக் கொண்டுள்ளார். எனவே கம்பன் திராவிடருக்கு எதிரானவன் என்று கூறப்படும் கருத்து வீண் அபவாதமே

கம்பனைப் [illegible] கவிஞர்கள், உலகத்திற்கு அப்பால் விரிந்து [illegible]த்தவர்கள். இன்றும் உயர்ந்தவை அத்தனையும் உலகத்திற்குப் பொதுவே. அவ்வுயர்ந்த அறிவை மொழியாலும், மதத்தாலும், பிரதேசத்தாலும் எல்லைப்படுத்திக் கொச்சைப் படுத்துவது வேதனைக்குரியது.

தமிழுலகில் கம்பனை மறைப்பது என்பது குடையால் தன்னை மறைத்துச் சூரியனை மறைத்து விட்டதாக நினைக்கும் அறியாமைக்குச் சமனானது.

கம்பனை வசைபாடும் கருத்தை ஆரம்பித்து வைத்த ஈ. வெ. ரா. பெரியார், அறிஞர் அண்ணா போன்றவர்கள் அரசியல் தேவைகளுக்காக இக்கருத்தை விதைத்ததாகப் பின் ஒப்புக் கொண்டுள்ளனர்.

அரசியல் தேவைகளுக்காக அவர்கள் முன்வைத்த கருத்துக்களை இன்று எம்மண்ணின் விடுதலைக்காக அனைவரும் ஒன்றுபட வேண்டிய வேளையில் முன்வைத்து, சமுதாயத்துக்குள் பிரிவினைகளை ஏற்படுத்துவது அறிவுடைய செயலன்று.

பல பேரின் வழிபாட்டுத் தெய்வமாக இராமன் மாறிவிட்ட சூழ் நிலையில், இத்தகைய வாதங்களால் இராமனும் இராமாயணமும் கொச்சைப்படுத்தப்படும் போது சமய உணர்வு பாதிக்கப்படுகின்றது. உலகின் வேறெந்தப் பகுதியிலும் அரசியல் தேவைக்காக தன் மொழியைச் சார்ந்த ஒரு பெரும் புலவனை மாசுபடுத்த [illegible] என்றார் அவர். [illegible]

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்: 18 — 04 — 1942

மறைவு: 14 — 02 — 1995

## அமரர் தியாகராசா அரசரத்தினம்

(முன்னாள் இ. போ. ச. சாரதி, காரைநகர்)

எங்கள் அன்பு அப்பா, அன்புத் தெய்வமே, அணையாத தீபமே, எண்ணும்போது உள்ளம் நெருப்பாய் எரிகிறதே. உண்ணும் உணவும் நஞ்சாய் மாறுகிறதே. கண்கள் கலங்கி இருளாய் தெரிகிறதே. உங்கள் படங்களைப் பார்க்கும்போது உயிரே துடிக்கிறதே, மாதம் ஒன்று ஆகுதப்பா, ஆசை முகம் பார்த்து, உற்ற துணை உங்கள் போல் கிட்டுமோ எங்களுக்கு. இவ்வையகத்தில் நீங்கள் மறைந்தாலும் எங்களால் மறக்க முடியுமா எந்தக் கணமும் உங்களை நினைத்து, நினைத்து மனம் வெதும்புகிறோம். உயிர் உள்ளவரை உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம். அப்பாவின் ஈமக்கிரியைகளில் பங்கு பற்றிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உங்கள் பிரிவால் தவிக்கும்,
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

காளுவன், சுழிபுரம்

(35681)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனையாகின்றது

விற்பனையாகின்றது. புதிய வெளியீடுகள் புதிய பாடத் திட்டத்திற்கானது நாமும் சுற்றாடலும் ஆண்டு - 2 தமிழ்மொழி ஆண்டு 1 - 2 (செயல் நூல்) தமிழ் மொழி மொழித் தேர்ச்சியும், இலக்கணமும் ஆண்டு 9, 10, 11 G. C. E. (O/L) தமிழ்மொழி அடிப் படை அறிவும் பயிற்சிகளும் ஆண்டு 6, 7, 8, 9, 10, 11 வெளியீடு. கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம்.

[8373]

விற்பனையாகின்றது. புதிய வெளியீடுகள் புதிய பாடத்திட்டத்திற்கானது. புதிய விஞ்ஞானம் பாடப் பொழிப்பும், தொழிற்பாடும் பயிற்சிகளும் ஆண்டு 6, 7, 8, 9, 10, 11 புதிய சமூகக்கல்வி பாட பொழிப் பும், தொழிற்பாடும் பயிற்சி களும் ஆண்டு 6, 7, 8, 9, 10, 11 வெளியீடு. கு. வி அச்சகம், யாழ்ப்பாணம்.

[8374]

### உடன் விற்பனை

புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. சிவப்பு வெள்ளை பேட்டுக்குஞ்சுகள் வர இருப்பதால் முன்கூட் டியே பதிவுசெய்க. நா. ஸ்ரீகாந்தன், சிவலிங்கப்புளி யடி, இல. 702, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்

[35682]

### சீயாக்காய்ப் பவுடர்

காவேரி சீயாக்காய்ப் பவு டர் ஆறு வகை இயற்கைப் பொருள்களால் தயாரிக்கப் படுவது. உஷ்ணத்தினால் வரக்கூடிய கூகைக்கட்டு, கண் நோய், கொப்பளிப்பான் போன்ற வியாதிகள் வராமல் இருப்பதற்கும் உடம்பை குளிர்மையாக வைத்திருப்ப தற்கும் கிழமைதோறும் தவ றாமல் காவேரி சீயாக்காய்ப் பவுடரை வாங்கிப் பாவியுங் கள். (45709)

### எரு விற்பனை

மாட்டு எரு விற்பனைக்கு உள்ளது. தொடர்பு: ''மில்க் வைற்'' (சி-756)

### காணி விற்பனை

உரும்பிராயில் பலாலி றோட்டிலிருந்து ¼ மைல் தூரத்தில் [கரந்தன் றோட் டில்] இரண்டு கிணறுகளைக் கொண்ட 70 பரப்பு தோட் டக்காணி விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டி யது. S. N. கந்தப்பிள்ளை, நந்தாவில் அம்மன் றோட், கோண்டாவில் மேற்கு.

[35684]

### கார் விற்பனைக்கு

Ford Prefect 105-E Model விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். இல. 32, இந் துக் கல்லூரி லேன், யாழ்ப்பா ணம். [35655]

### குஞ்சுகள் விநியோகம்

புறொயிலர் குஞ்சுகள் உடன் பெற்றுக்கொள்ள லாம். நாலு மாதம் நிரம்பிய சிவப்பு [Golden Comet] கோல்டன் கமற் பேட்டுக் கோழிகள் விற்பனைக்குண்டு. இறைச்சிக்கோழி விற்பனை நிலையம், இல. 15/7, முரு கேசர் வீதி, முத்திரைச் சந் தையடி, நல்லூர்.

[35686]

### புலமைப்பரிசில்

மேற்படி பரீட்சைக்கான பொது அறிவு, மொழித் திறன் வெளிவந்து விட்டது. 60/- மட்டுமே. சகல புத்தக சாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். அறிவகம் புத்தகசாலை, வெலிங்டன் சந்தி, 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(சி-619)

### தவறிவிட்டது

13 - 3 - 95 திங்கட்கிழமை மாலை கிளாலிக்கும் கொடி காமத்திற்கும் இடையில் வில் லியர்ஸ் வாட்டர் பம்ப் உப உறுப்புக்களும், காசு இருபதி னாயிரம் ரூபாவும் மற்றும் ஆபரணங்களும் தவறிவிட் டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் விலா சத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப் படும். சி. திருநாவுக்கரசு, இல. 6, ராதாலேன், வண் ணார்பண்ணை. (35707)

### வீடு தேவை

யாழ். மாநகர எல்லைக்குள் வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: இல. 222, ஆஸ் பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

[8383]

### மணமகன் தேவை

அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றில் லிகிதராகக் கடமை யாற்றும், உத்தராடம் 1ஆம் பாதம், 8இல் செவ்வாய் உள்ளவருக்கு 33 வயதிற்கு மேற்பட்ட சைவசமய மண மகன் தேவை. அரசாங்கத் திலோ, தனியார்துறையிலோ யாழ்ப்பாணத்தில் வேலை செய்பவர் விரும்பத்தக்கது. இல. 768, மே/பா, உதயன், யாழ்ப்பாணம். (35674)

### திருமண சேவை

சகல உத்தியோக தரத்தி லும் மணமகன்கள், மண மகள்கள் எம்மிடம் உண்டு. தாரமிழந்தவர்களும் நேரிலோ அல்லது கடித மூலமோ தொடர்பு கொள் ளலாம். இ. பாஸ்கரன், திருக்குமரன் மங்கள ஏஜென்ஸி, இல. 41, பிரப் பங்குளம் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

(35623)

### வீனஸ் அன்ரனா

T. V. அன்ரனா பொருத் துதல், பழுதுபார்த்தல், T. V. டெக், றேடியோ, மணிக்கூடுகள் திருத்திக் கொள்வதற்கு வீனஸ் டிஸ்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப் பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. [சி-396]

## பண்ணிசையும் பக்திப்பாடலும்

தொண்டமனாறு ஸ்ரீசெல் வச்சந்நிதி ஆலயத்தில் சந்நிதி யான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் நடைபெற்று வரும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை பிற் பகல் 3மணிக்கு சரணவாய் மகாவித்தியாலய மாணவர் களின் பண்ணிசையும் பக்திப் பாடலும் இடம்பெறும்.

அறிமுகவுரையை மேற்படி பாடசாலையின் அதிபர் பண்டிதர் சி. வேலாயுதம் வழங்குவார். [இ-14]

---

யாழ். இந்துக் கல்லூரி

**பழைய மாணவர் சங்கத்தினர்**

வழங்கும்

## முழுநிலாக் கருத்தரங்கு

காலம்: **16-03-1995**

இடம்: யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபம்

கருத்துரை I மாலை 3 - 4 வரை

**"சைவசித்தாந்தம் ஒரு வாழ்க்கை நெறி"**

வழங்குபவர்: கலாநிதி நா. ஞானகுமாரன் (சிரேஷ்ட விரிவுரையாளர் மெய்யியற்றுறை, யாழ் பல்கலைக்கழகம்)

கருத்துரை II மாலை 4 - 5 வரை

**"இலக்கியம் - எது, ஏன்?"**

வழங்குபவர்: திரு. சோ. பத்மநாதன் உப அதிபர், பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரி

ஆர்வலர்கள் அனைவரையும் இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்,
யாழ். இந்துக் கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்.

விளம்பர அன்பளிப்பு:

**லிங்கம் குளிர் களியகம்**

வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

[சி-755]

---

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர் திரு தி. தர்மலிங்கம் அவர்களின் தந்தையார்

**கணபதிப்பிள்ளை தில்லைநாதன்**

அவர்கள்

அமரத்துவம் எய்தியதையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக.

அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.

யா/காரைநகர்,
யாழ்ற்ரன் கல்லூரி,
வட்டுக்கோட்டை.

([35710)

---

## சோதி படப்பிடிப்பு கலையகம்

உங்கள் இல்லங்களில் நடைபெறும்
திருமணம், பூப்புனித நீராட்டுவிழா,
பிறந்த நாள் விழா
போன்ற இனிய நிகழ்வுகளை
காலத்தால் அழியாத கண்ணைக் கவரும் வர்ணங்களில்
(மிக்ஸிங் முறையில்)
நிழற்படம் பிடித்திடவும் பாஸ்போட்,
அடையாள அட்டை
மற்றும் தேவைக்கான கறுப்பு வெள்ளைப் படங்களை
தெளிவாகப் பிடித்திடவும்

நீங்கள் நாடவேண்டிய இடம்


**"சோதி படப்பிடிப்பு கலையகம்"**

காங்கேசன்துறை சாலை,
மல்லாகம்.

(8286)

---

## 9-ம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் மு. சி. கனகரத்தினம்**

[ஆசிரியர்]

**திதி: 16 - 03 - 1995**

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிராத்திக்கின்றோம்,

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

13/3, நாயன்மார் வீதி,
நல்லூர்.

(35693)

---

# தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

நடத்தும்

# உற்பத்தி எழுச்சி வாரம் - 1995

★ உற்பத்திக்கு கௌரவிப்பு
★ உற்பத்தித் திறனுக்கு உன்னத பரிசில்கள்
★ உற்பத்தியாளருக்கு ஊக்கம்
★ ஆண்டு தோறும் தொடர்வது இந்நிகழ்வு

காலம் 1995 சித்திரை 24 ஆம் நாள் முதல் 30 ஆம் நாள் வரை

## மாவட்ட ரீதியாக நடைபெறும் போட்டிகள்

### விவசாயப் போட்டிகள்

நிலம் உழுதல்
துலா மிதித்தல்
நிலம் கொத்துதல்
மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி

### பனை, தென்னை வள அபிவிருத்தி தொடர்பான போட்டிகள்

குட்டான் இழைத்தல்
கிடுகு பின்னுதல்
பனை மரம் ஏறுதல்

### கடல்வள போட்டிகள்

நீச்சல்
பாய்மரம் ஓட்டுதல்
தண்டு வலித்தல்
துடுப்பு வலித்தல்
வலை பின்னுதல்

### சிறு கைத்தொழில் போட்டிகள்

கயிறு முறுக்குதல்
ஈர்க்குக்கட்டு கட்டுதல்
தும்புத்தடி கட்டுதல்

### பொதுவான போட்டிகள்

வீதி திருத்துதல்
வாய்க்கால் திருத்துதல்
குளம் புனரமைப்பு

விண்ணப்ப முடிவு திகதி:- **01 - 04 - 1995** போட்டிகள் யாவும் **10-04-1995** ஆம் திகதி ஆரம்பமாகும்.

போட்டி விதிகளையும், விண்ணப்பப் படிவங்களையும் உங்கள் பகுதி கிராமிய உற்பத்திக் குழுக்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

★ தொழில் சிறக்கும், தமிழீழம் பிறக்கும் ★

**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,**
அரசியல் துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழம்.

[சி-759]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்
292/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்


## அரசுக்கு ஒரு வார்த்தை!

அரசமைப்புச் சீர்திருத்தம் சம்பந்தமாக ஆராய்ந்து வரும் தெரிவுக்குழுவில், அதிகாரப் பரவல் சம்பந்தமாக ஓர் இணக்கம் வந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

அக்குழுவில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் யாவும், இப்போதுள்ளதை விட கூடுதல் அதிகாரங்கள் கொண்ட அதிகாரப் பரவலாக்கல் அலகை உருவாக்க வேண்டும் என்பதில் கருத்திணக்கம் கண்டிருக்கின்றன என்பதே தகவல்.

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் குறித்த விவகாரங்களை ஒதுக்கிவிட்டு அரசியல் தீர்வு குறித்துப் பேசுவதற்கு அவசரப்படும் சந்திரிகா, தாம் விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிக்கப் போவதாகக் கூறும் அரசின் தீர்வுத் திட்டம் மேற்கூறிய கூடுதல் அதிகாரம் கொண்ட அலகாகத்தான் இருக்குமோ என்று எண்ணத் தோன்றுகிறது!

கூடுதல் அதிகாரம் கொண்ட புதிய அலகு என்ற அடிப்படையில் வரும் எந்தத் திட்டமும் தமிழர்கள் ஏற்கக் கூடிய ஒன்றாக இருக்க மாட்டாது. இதனைச் சந்திரிகாவுக்கும், அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் உட்பட்ட ஏனைய அரச தரப்பினருக்கும் முன் கூட்டியே கூறி வைக்க விரும்புகிறோம்.

வடக்கு-கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தில் தன்னாட்சி அதிகாரம் கொண்ட ஆட்சி முறையே தமிழர்களைத் திருப்திப்படுத்தக் கூடிய ஆகக்குறைந்த தீர்வு. அதனை மனதில் வைத்துச் செயலாற்றினால் மட்டுமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண முடியும் என்பதனை அரசு உணர வேண்டும்.

வடக்கைப் பொறுத்த வரையில் இங்கே தன்னாட்சிக்கான கட்டமைப்பு உருவாகி விட்டது; அது செயற்படுகிறது.

எனவே அதற்கு மேலான ஓர் ஆட்சி அமைப்பு முறையையே தமிழர்கள் ஏற்றுக் கொள்வர் என்பதனை எவரும் புரிந்து கொள்ளலாம். இத்தகைய ஒரு நிலையில் சமஷ்டி எனப்படும் கூட்டாட்சி முறையைத் தவிர ஒற்றையாட்சி அரசமைப்பின் கீழ் வகுக்கப்படும் எந்தத் திட்டமும் தீர்வாக முடியாது.

ஒற்றையாட்சி அரசமைப்பை மாற்றி கூட்டாட்சி அரசமைப்பை இயற்றுவதில் சந்திரிகா அரசுக்கு உள்ள கஷ்டம் என்ன? மனம் இருந்தால் இடமுண்டு. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுமாறு மக்கள் ஆணை பெற்ற அரசு உகந்த நியாயமான தீர்வை வகுப்பதற்குப் பின்னடிப்பது ஏன்?

அதிகாரப் பரவல் செய்வது என்பது இப்போது கொழும்பு அரசிடம் உள்ள அதிகாரங்களில் சிலவற்றை புதிய அலகுக்கு அல்லது அலகுகளுக்கு கைமாற்றுவது என்பதேயாகும். தமிழர்கள் இத்தனை வருடப் போராட்டத்தின் பின்னர் இதனை ஏற்றுக் கொள்வர் என்று அரசு எதிர்பார்க்கிறதா?

சிங்கள மக்களுக்குள்ள ஆட்சி அதிகாரம், அதே அளவில் — சம அளவில் — சுயமாக சுதந்திரமாக இயங்கும் விதத்தில் தமிழர்களுக்கும் அதிகாரம் உறுதி செய்யப்பட்டால் மட்டுமே, இனப்பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வைக் காணமுடியும்.

ஆகையால் கூட்டாட்சி — சமஷ்டி — அரசமைப்பு முறையைக் கொண்டு வருவது மிகவும் அவசியமாகும். அந்த அடிப்படையில் வைத்தே உகந்த தீர்வு ஒன்றை வகுத்துக் கொள்ள முடியும்.

கூட்டாட்சி முறை தமிழர்கள் தனிநாடு ஒன்றை உருவாக்க வழிவகுக்கும் என்று தெற்கின் சிறுசாரார் கூறும் அபத்தமான வாதத்தை அரசு சிரணிக்குமானால், ஒற்றையாட்சி முறையையே பற்றிக் கொண்டிருக்க விரும்புமானல், தமிழர் தனிநாடு தானாக மலரும்!

கூட்டாட்சி (சமஷ்டி) அரசு, மாநில அரசுகளைத் தோற்றுவிக்கவில்லை; மாநில அரசுகள் சேர்ந்தே கூட்டாட்சி அரசை உண்டாக்கின என்று அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி றேகன் கூறியதை சந்திரிகா அரசுக்கு ஞாபகப்படுத்துவது பொருத்தம்.

---

## கலை விழா

யாழ்ப்பாணம், மார்ச் 16

இராசகிராமம் திருவர் போசாக்கு பராமரிப்புப் பூங்காவின் அபிவிருத்தி நிதிக்கான கலைவிழா இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

இவ்விழாவில் 'இன்னிசை கான மழை', கோப்பாய் சுதேச கலாமன்றம் வழங்கும் 'அவள் ஒரு மாதிரி', ''ஆவினில் இனியவள்'' ஆகிய நாடகங்கள் என்பன இடம் பெறும். (ஐ-14)

## உலர் உணவு விநியோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்க பாவனையாளர்கள், தமது ஜனவரி முதல் இரு வாரங்களுக்குரிய, (23 ஏ) உலர் உணவுப் பொருள்களை நாளை மறுதினம் சனிக்கிழமைக்கு முன் பெற்றுக் கொள்ளும்படியும் —

இத்திகதிக்குப் பின் பொருள்கள் வழங்கப்பட மாட்டாது எனவும் சங்க பொது முகாமையாளர் அறிவித்துள்ளார். (ஐ-5)

## ஆண்டு நிறைவு அன்னதானம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் 24ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி பூரணை தினமான இன்று பகல் அன்னதானம் வழங்கப்படவுள்ளது.

பஜனை, வழிபாடுகளும் இடம்பெறும். (ஐ-14)

## மேற்குலக ராஜதந்திரிகள் அறிக்கை சமர்ப்பிப்பர்

அண்மையில் யாழ்ப்பாணம் வந்து திரும்பிய மேற்குலக ராஜதந்திரிகள் இங்குள்ள நிலைவரம் தொடர்பான தமது தனித்தனியான அறிக்கைகளை தத்தமது நாடுகளுக்குச் சமர்ப்பிக்கவுள்ளனர்.

அறிக்கைகளைத் தயாரிக்கும் முயற்சியில் ராஜதந்திரிகள் தற்சமயம் ஈடுபட்டுள்ளனர் என இலங்கை வானொலி அறிவித்தது.

இன்னும் இரண்டொரு தினங்களில், தமது அறிக்கைகளை, அவர்கள் தத்தமது நாடுகளுக்கு சமர்ப்பிப்பர் என்றும்—

அவர்கள் சமர்ப்பிக்கும் அறிக்கைகள்—வடபகுதி புனரமைப்பிற்கு மேற்குலக நாடுகள் நிதி உதவிகள் வழங்கும் விடயத்தில் முக்கியத்துவம் பெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-5)

## 'யுக்திய' பத்திரிகைக்கு ரூபா 1 லட்சம் நட்டஈடு

### நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, மார்ச் 16

அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒன்றில் யுக்திய ஆசிரியர் மற்றும் உரிமையாளருக்கு ஒரு லட்சம் ரூபா நட்டஈடு வழங்கும்படி நுவரெலியா மேயர் திருமதி நளின் திலகா ஹேரத்துக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யுக்திய பத்திரிகையின் 450 பிரதிகளை பலாத்காரமாக கைப்பற்றி எடுத்துச் சென்றதன் மூலம் நுவரெலியா மேயர் பேச்சுச் சுதந்திரம் மற்றும் அபிப்பிராயம் வெளியிடுதல் ஆகிய அடிப்படை உரிமைகளை மீறி விட்டதாக ''யுக்திய'' ஆசிரியர் கனந்த தேசப்பிரிய யுக்திய நிறுவன உரிமையாளர் சி.ஜே. அமரதுங்க ஆகியோர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் வழக்கிலேயே முன்கண்ட தீர்ப்பு வழங்கப்பட்டது. (ஐ-எ)

## நவீல்ட் பாடசாலையில்

யாழ்ப்பாணம், மார்ச் 16

கைதடி செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

முதன்மைவிருந்தினராக காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசனும், சிறப்பு விருந்தினராக வைத்திய கலாநிதி பி. சண்முகரட்ணமும் கலந்து கொள்வர். (ஐ-14)

## கூட்டுறவு ...ற்சிக் கல்லூரி உயர் பிரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ். மாவட்ட கூட்டுறவு பயிற்சிக் கல்லூரியில், கூட்டுறவு பணியாளர் தராதரப் பத்திர புதிய உயர் பிரிவொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்ட இப்புதிய பிரிவின் ஆரம்ப வைபவத்திற்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் தலைவர் செந்திநாதன் தலைமை வகித்தார். தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் திரு. டொமினிக் உட்பட கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த பலர் உரை நிகழ்த்தினர். (இ-5-4)

## திருவள்ளுவர் பெரு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 16

அகில இலங்கை திருவள்ளுவர் கோட்டத்தின் திருவள்ளுவர் பெருவிழா இன்று வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு இன்பருட்டி காண்டீபன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும்.

சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் திருக்குறள் பேருரையை பேராசிரியர் அ. சண்முகதாஸும் திருக்குறள் ஆய்வுரையை திருமதி மனோன்மணி சண்முகதாஸும் வழங்குவர்.

தொடர்ந்து திருக்குறள் சிறப்புரைகள், நேர்காணல் பட்டிமன்றம் என்பன இடம் பெறும். [ஐ-14]

## பிறப்பு, இறப்பு திருமணப்பதிவு

## பிரதேச செயலகங்களில் விண்ணப்பங்கள் ஏற்கப்படும்

நவாலி, மார்ச் 16

யாழ். மாவட்டத்தில், பிறப்பு, இறப்பு மற்றும் திருமண அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற விண்ணப்பிப்போர், இனிமேல் தமது விண்ணப்பப்படிவங்களை தங்களது பகுதி பிரதேச செயலகங்களிலும் ஒப்படைக்கலாம்.

இதற்கான நடவடிக்கைகளை யாழ். அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம் எடுத்துள்ளார்.

இதுசம்பந்தமான சுற்று நிருபம் ஒன்றையும், சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அவர் அனுப்பி வைத்துள்ளார்.

பொதுமக்களின் வசதிகருதி இவ்விண்ணப்பப்படிவங்களை, சுய முகவரி இடப்பட்ட கடித உறையுடன் பெற்று, அவற்றை மேலதிக மாவட்டப் பதிவாளருக்கு அனுப்பிவைக்கும்படி பிரதேச செயலர்கள் அதன் மூலம் கேட்கப்பட்டுள்ளனர்.

இதன்படி மேலதிக மாவட்டப் பதிவாளர் இவ்விண்ணப்பப்படிவங்களுக்கான சான்றிதழ்களை எழுதி உரியவர்களுக்கு அனுப்பி வைப்பார்.

யாழ். மாவட்டத்தில் பல திருமணங்கள் சட்டரீதியாக பதிவு செய்யப்படாமல் இருப்பதாகவும்—

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் எத்தனை திருமணங்கள் பதிவு செய்யப்படாமல் உள்ளன என்ற விவரத்தை மேலதிக மாவட்ட பதிவாளருக்கு உடனடியாக அனுப்பிவைக்குமாறும் அச்சுற்று நிருபத்தில் கேட்கப்பட்டுள்ளது.

காலம் கடந்த பிறப்பு, இறப்பு பதிவு செய்யும் நடவடிக்கைகளையும், பிரதேச செயலகங்கள் மூலம் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அரச அதிபர் தெரிவித்துள்ளார். [ஐ-5-100]

## நிர்வாகசேவை பரீட்சை

இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை நாளை மறுதினம் 18ஆம் திகதி கொழும்பில் நடைபெறும்.

அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாத பரீட்சார்த்திகள் கொழும்பிலுள்ள கல்வி நிர்வாக சேவைப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## வறுமை நிவாரண உணவு விநியோகம்

யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளைகளில், தற்போது, வறுமை நிவாரண உணவு முத்திரையின் 11 ஆம் புள்ளிக்கான உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டு வருவதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-5-17)

---

# சந்திரிகாவின் இனப்பிரச்சினைக்கான அணுகுமுறை

# மனிதாபிமான முகத்துடனான இனவாதம்

## தமது யாழ். அனுபவம் குறித்து தராக்கி

*பத்திரிகையாளரும் அரசியல் விமர்சகருமான ''தராக்கி'' (டி சிவராம்) சமீபத்தில் யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவர் தமது யாழ். அனுபவங்கள் குறித்து கொழும்பில் இருந்து வெளிவரும் ''சரிநிகர்'' தமிழ் பத்திரிகையில் எழுதிய கட்டுரையின் தொகுப்பு இங்கு பிரசுரமாகி உள்ளது.*

நான் வாழ்க்கையில் இனி மேற்கொள்ள மாட்டேன் என எண்ணியிருந்த விடயம் யாழ்ப்பாணப் பயணம். தமிழ் ஈழம் என்றோ உருவாகினால் எங்கிருந்தோ வாழ்த்தி உளம் குளிர்வோம் என்ற எண்ணம் மனதில் நிரந்தரமாகிக் கொண்டிருந்த காலம் கேட்டுத்தான் பார்ப்போமே எனும் ஒரு அசட்டுத் துணிச்சல். தெரிந்தவர்களெல்லாம் சொல்லி விட்டனர் போனால் நீ தொலைந்தாய் என்று உன்னுடைய எழுத்துக்கு அவ்விடம் பாதாளச் சிறைதான் என்றனர் விஷயமறிந்தவர்களாகக் கருதப்படும் சிலர்.

### துணிந்து புறப்பட்டேன்

எனக்குத் தலையில் தட்டி விட்டதா எனக் கேட்டான் என் சிங்கள சகபாடி ஒருத்தன். புலிகளிடம் யாழ். வர சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் [I. C. R. C.] ஊடாக அனுமதி கோருவதற்கு சரியாக ஒரு வாரத்துக்கு முன்னர் தான அருளர் விஷயத்தில் தமிழ்ச்செல்வனை கடுமையாகச் சாடி ஆங்கிலத்தில் ஒரு கட்டுரை வரைந்திருந்தேன். இதன் காரணமாகவும் பலர் என்னைப் போகாதே என்றனர். ஒரே ஒரு நபரைத் தவிர.

இதற்கிடையில் யாழ்ப்பாணத்திலிருந்து I.C.R.C. ஊடாக புலிகள் நான் அங்கு செல்வதற்கான அனுமதியை அனுப்பியிருந்தனர். எனவே சென்றேன். பிரதிப் பாதுகாப்பு அமைச்சரைக் கடைசி நேரத்தில் கண்டு அவசர அவசரமாக எடுக்கப்பட்ட பாதுகாப்பு அனுமதியாகையால் அதில் ஒரு குழப்பம் வவுனியா இராணுவப் பொலீஸ் நிலைய அதிகாரிக்கு. ஆகவே பத்திரிகையாளன் என்றில்லாமல் சாதாரண தமிழ்க் குடிமகனாகவே தாண்டிக்குளம் தடை முகாமூடாகச் சென்று விட்டேன்.

### தலை வெடிக்கும் வெயில்

சோதனை பலமாக இல்லை. நொச்சிமோட்டைப் பாலத்திற்கப்பால் தலை வெடிக்கும் வெயிலில் நடக்க வேண்டும் அரை மைலுக்கு மேல், சாப்பாட்டுக்கடை வரும் வரை. அரசும் புலிகளும் மோதல் தவிர்ப்பு உடன்படிக்கையின் கீழ் இந்த யாருக்குமற்ற பிராந்தியத்தில் [Noman's Land] ஒரு வண்டியை யாழ்ப்பயணிகளின் வசதிக்காக விடலாம். சிறு குழந்தைகளும், வயோதிபர்களும் பெரும் மூட்டை முடிச்சுகளுடன் செல்வோரும் கொதிக்கும் வெயிலில் யாருமில்லா இந்த இடைவெளியில் மிகவும் துன்புறுகின்றனர்.

ஓமந்தையில் புலிகளின் விசாலமான எல்லைப்புறக் குடிவரவு நிலையம். 'தமிழ் ஈழம் உங்களை வரவேற்கின்றது' எனப் பெரிய பெயர்ப்பலகை. பயணிகளை வகைப்படுத்தி சோதனையிட குறிகாட்டிகள். [இந்தியாவிலிருந்து வருபவர்களுக்கு ஒரு சோதனை நிலையம்] மருத்துவ நிலையம், சிற்றுண்டிச் சாலையும் உண்டு.

### ஓமந்தையில் பிரயாணிகள் தரிப்பிடம்

ஓமந்தைக் குடிவரவு நிலையத்துக்கு அப்பால் மிக நேர்த்தியான ஒரு பிரயாணிகள் தரிப்பிடம் அடிப்படை நல் வசதிகளுடன் அண்மையில் உருவாக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சியை நோக்கிய பயணத்தில் தார்றோட்டினை சிற்சில இடங்களில் மாத்திரமே காணலாம். மற்றப்படி கிறவலும் குழியும்தான். வழியில் நேர்த்தியானவை எனச் சொல்லக்கூடிய விதத்தில் தமிழீழ காவல் நிலையம், நீதிமன்றம் மற்றும் புலிகள் நிறுவியுள்ள ஒரு வாசிகசாலை (புளியங்குளத்திற்கு அருகில் என நினைக்கின்றேன்) போன்றவை உண்டு.

சாலையோரக் கிராமங்களில் மக்கள் நடமாட்டத்தின் வீழ்ச்சி நீண்டகாலத்தின் பின் செல்பவர்களுக்கு கண்ணை உறுத்தும் ஒரு விஷயம் பிரயாணச் சிக்கல்கள், செலவினம் ஆகியன காரணமாக மக்கள் அதிகம் வெளியில் நடமாடுவதில்லையா? அல்லது யுத்தத்தின் கொடூரத்தால் மக்கள் தொகையில் கணிசமான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதா? இதுயாழ். சென்று திரும்பும் வரை என்னில் தோன்றிய ஒரு கேள்வி. இங்ஙனம் கேள்வி தோன்றக் காரணம் உண்டு.

பிரேமதாசாவின் ஆலோசகர்களில் ஒருவர் யுத்தநெருக்கத்தாலும் அழிவுகளாலும் வடக்கில் சனத்தொகை வீழ்ந்து விட்டால் புலிகளுக்கு வருமானமும் ஆட்சேர்ப்பு வசதியும் இல்லாமற் போய் விடும், இது அரசிற்கு வெற்றியைப் பெற்றுத்தரும் எனக் கூறிவந்தார் [illegible] போது ஒரு சனத்தொகை மதிப்பீட்டை [illegible] கின்றனர். அது நிறைவேறினால் நிலைமை தெரிய வரும் யுத்த நெருக்கத்தால் சனத்தொகை வீழ்ச்சியை ஏற்படுத்தி வெல்லுதல் என்பது இராணுவங்கள் கையாளக் கூடிய ஒரு தந்திரோபாயம்.

### புளியங்குளம் சந்தியில்

புளியங்குளம் சந்தியில் பழைய கடைகள் அதே நிலையில் உள்ளன. முற்காலத்தில் அதில் ஒரு கடையில் மான் இறைச்சியும் இடியப்பமும் தின்றுவிட்டு சந்திக்கு அண்மையில் உள்ள காட்டு பாதையில் போனால் வரும் மரையடிச்சகுளத்தில் என் பழைய கூட்டாளி R. R உடன் தங்கியிருந்த சில நாட்களின் நினைவு நெஞ்சில் நிழலாடினது.

மாங்குளம் சந்தியை நெருங்கும் போது தாக்கப்பட்ட முகாமையும் அதன் சுற்று வட்டாரத்தையும் ஆறுதலாகப் பார்க்க வேண்டுமென ஆவல். அம் முகாம் தாக்குதலைப் பற்றி ஆங்கிலத்தில் நான் எழுதிய கட்டுரையில் இழையோடிய 'சில புலியியற் கருத்துக்களை சரி பார்த்துக் கொள்ளலாமே என ஒரு எண்ணம் சரிவரவில்லை. யாழ். இரவு பஸ்ஸில் போகையில் மாங்குளம் தடைமுகாமில் திடீர்ச் சோதனைக்காக ஈரல் கருக இறங்கிய காலமும் உண்டு.

முகாம் இருந்த இடத்தில் மாவீரர் துயிலும் இல்லம். முகாமிற்குள் புகுந்த கரும் புலிகளின் வாகனம் வெடித்த இடம் என்று றோட்டில் பெரிய பள்ளத்தாக்கைக் காட்டினார் எமது சாரதி.

### துணிச்சல் மிக்க சிறுமிகள்

மாங்குளம் சந்திக்கு சற்று அப்பால் பாடசாலைச் சிறுமியர் மூவர் துணிச்சலாக மறித்து ஏறிக் கொண்டனர்.

ஒவ்வொருநாளும் பாடசாலை போகவர எட்டு மைல் நடை. கொதிக்கும் வெயில், ஆங்கில ஆசிரியர் வருவதில்லையாம். இப்படியாக அந்த மண்ணில் இன்னொரு சின்னப் பெண், காலிலும், நெஞ்சிலும் மாறாத வடு. மாற்றவும் மனமில்லை. சிதைந்து போன உள்ளத்தின் துகள்களை காலால் தட்டிவிட்டு கருமமே கண்ணாக மேற்செல்லும் அவளது வைராக்கியம். திடமாகவும் நேராகவும் நிமிரும் பனை வளரும் மண்தானே அது. என்னைப் போன்ற மட்டக்களப்பானுக்கு இம் மனநிலை என்றும் ஒரு புதிர் தான்.

ஈழப்போரின் முன்பிருந்ததைப் போல் முறிகண்டிப்பிள்ளையார் [illegible] யில்லை வாகனங்கள் குறை[illegible] பெரும்பாலும் உண்டு.

### புலிகள் பிரதிநிதிகள் சந்தித்தனர்

கிளிநொச்சியில் புலிகளின் அரசியற்துறைப் பணிமனை. அங்கிருந்து துறை நோக்கிய பயணம் கடினமானது. ஏரி கடந்தால் கிளாலித்துறைப் போக்குவரத்து மையத்தில் இராக்கடை உண்டு. புலிகள் நடத்துகிறார்கள். கொத்து ரொட்டி ருசியானது. யாழ்ப்பாணம் போய்ச் சேரும் போது நடுச்சாமம். சுபாஷ் ஹோட்டலில் நான் வருவது தெரிந்திருந்தது.

புலிகள் பத்திரிகை தொடர்பாளர் ஜெயாமாஸ்ரர் மற்றும் அவருடைய உதவியாளர் மாறன் ஆகியோர் சந்திக்க வந்திருந்தனர். நான் எங்கெங்கு செல்ல வேண்டும் புலிப்பிரமுகர் எவரைக் காண வேண்டும் எனக்கேட்டு கவனமாகக் குறித்துக் கொண்டனர். ''இருங்கள் வாகனம் எடுத்து வருகிறோம்'' என்று போனவர்கள், சில மணித்தியாலங்கள் காணவில்லை.

இடையில் யாழ் பத்திரிகை ஒன்றிலிருந்து என்னைச்சந்திக்க வந்த ஒரு இளம் நிருபருடன் யாழ். நகரைப் பார்க்கலாம் என்று புறப்பட்டேன். நூலகம், வீரசிங்கம் மண்டபம், தபாலகம் மற்றும் கோட்டையை அண்டிய பகுதிகள் அனைத்தும் புதர் மண்டி அழிந்து கிடக்கின்றன.

### தூய தமிழில் பெயர்ப்பலகை

பேருந்து நிலையம் வேறு இடம் சென்றுள்ளது. என்னைப்போல் ஏழு, எட்டு வருடங்களின் பின் யாழ்ப்பாணம் செல்லும் ஒருவனுக்கு அந்த நகரத்தின் பழைய மிடுக்கையும் கலகலப்பையும் எண்ணிப் பார்க்கையில் நெஞ்சில் ஏக்கமும் கவலையும் வராமல் போகாது.

சுபாஸ்கபே செல்லடிபட்டு முடிக்கிடக்கிறது.

றொலெக்ஸ் கபே தனித் தமிழ் மாற்றம் பெற்று தாமரை குளிர் தடாகம் என்ற பெயர்ப் பலகையுடன் வியாபாரம் நடக்கின்றது. நகரமெங்கும் பெயர்ப்பலகைகள் தூயதமிழில் காணப்படுகின்றன. பேக்கரிகள் வெதுப்பகங்களாகவும், 'ஸ்டோர்கள்' களஞ்சியங்களாகவும் கூல்பார்கள் 'குளிரருவி' 'சுவையருவி' எனவும், 'ரெக்கோடிங்பார்கள்' ஒலியகம் இசையகம் எனவும் டிரெடர்ஸ் வாணிபமாகவும் தனித்தமிழ் வடிவம் பெற்றுள்ளன.

பிரபல யாழ். புடைவைக் கடையான சிமாட்டி, திருமாட்டியென தனித்தமிழாகி விட்டது. யாழ். நகரம் செல்லும் தமிழபிமானிகள் நெஞ்சம் இவற்றையெல்லாம் கண்டு மகிழ்ந்திடக்கூடிய வகையில் பெயர்ப்பலகைகளில் இன் தமிழ் கொஞ்சி விளையாடுகிறது.

இவற்றையெல்லாம் பார்த்துச் செல்கையில் தனித், தமிழை வடக்கில் நடைமுறைப் படுத்திவரும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தையும் அதன் பொறுப்பாளரும் பிரபாகரனுக்கு அடுத்ததாக புலிகளின் மிக மூத்த உறுப்பினரான பேபி சுப்பிரமணியம் என்னும் இளங்குமரனையும் காணவேண்டும் என்ற எண்ணம் என்னில் மேலோங்கிற்று.

### மாவீரர் துயிலும் இல்லம்

அன்று பிற்பகல் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் சென்றோம். மிக நேர்த்தியாய் பேணப்படுகிறது. இது ஓர் படை வீரரின் மயானம் என்ற எண்ணம் தோன்ற முடியாத வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இறந்த புலிகள் சிலரின் நடுகற்களுக்கு அஞ்சலி செலுத்த வந்திருந்த ஒரு சிலர் அங்கு காணப்பட்டனர்.

பண்டைய தமிழகத்தில் களத்தில் சிறப்புடன் போரிட்டு வீழ்ந்த வீரர்களுக்கு நடுகற்கள் வைத்தும் திருப்படைப் பள்ளிகள் எழுப்பியும், வழிபட்ட மரபு பலமாக வேரூன்றி இருந்தது நாமறிந்ததே. யாழ்ப்பாணத்திலும் சமஸ்கிருத வழிபட்ட இந்து மதம் நாவலர் போன்றோர்களால் பரப்பப்படுவதற்கு முன்னர் இவ்வீர மரபை அடித்தளமாகக் கொண்ட ஒரு வழிபாட்டு முறை இருந்தது. உதாரணமாக யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயில் என்பது ஒல்லாந்தருடன் போரிட்ட ஏழு வன்னிச்சிகள் தாம் கைப்பற்றப்படுவதை தவிர்ப்பதற்காக நஞ்சருந்தி மாண்ட பின் அவர்களுக்காக எழுப்பப்பட்ட கோயிலாகுமென்று பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை குறிப்பிடுகிறார். இன்று வடநாட்டில் இருந்து குடாநாட்டுக்குள் இறக்குமதியாகியிருக்கும் தெய்வங்களும் அவற்றினுடைய சமஸ்கிருதமயப்பட்ட வழிபாட்டு முறையும், யாழ். மக்களின் மனதில் வேரூன்றிப் போயிருக்கின்ற ஒரு சூழ்நிலையில் மாவீரரை மதித்துப் போற்றும் மரபு எந்தளவுக்கு வேரோடி வருகின்றது என்பது ஆராயப்பட வேண்டிய விசயம்.

யாழ். தமிழர், சாய்பாபாவையும், சங்கராச்சாரியாரையும் மற்றும் பல சமஸ்கிருத கலாசாரக் கடவுளரையும் பக்திப் பரவசமாகி, பணம் இறைத்து வழிபடும் இந்தக் காலகட்டத்தில் புலிகளின் மாவீரர் துயிலும் இல்லமானது தமிழ் மரபினை மீட்டிட ஒரு பெரு முயற்சி எனக் கூறினால் மிகையாகாது.

அடுத்து ஜெயாமாஸ்டரும் மாறனும் கிட்டு சிறுவர் பூங்காவிற்கு அழைத்துச் சென்றனர். விசாலமாக அமைக்கப்பட்டுள்ளது. மீன் தொட்டிகள் அமைந்த செயற்கைக் குகை, உயர்பாலம் எல்லாம் உண்டு. புலோப்பளைச் சமரில் தகர்க்கப்பட்ட இலங்கை இராணுவத்தின் ஒரு பெரிய தாங்கி ஒன்று (ரி-52) காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. ரியூசனே கதி என்று திரியும் யாழ். சிறார் கிட்டு பூங்காவில் நான் போன நேரத்தில் அதிகமாகக் காணப்படவில்லை. அடுத்தநாள் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு.

### தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

இளைஞன் என்றாலும் ஆள் திறமைசாலி. கொழும்பு அரசியல் நிலையைப்பற்றித் தான் கூடுவாக பேசவேண்டியதாயிற்று. புலி அரசியல் துறை என் போன்ற பத்திரிகையாளர்களுக்கு உடனுக்குடன் தனது நிலைப்பாட்டினைத் தெரிவுபடுத்தி விஷயங்களை அனுப்பிவைத்தால் பல குழப்பங்கள் தவிர்க்கப்படலாம் எனக் கூறினேன். புலிகள் தரப்பு நியாயம் யாழ் மக்களுக்கு மட்டுமே தெரிகிறதே ஒழிய தெற்கில் இருப்போருக்கும், மேற்குநாடுகளுக்கும் பெரிதாகத் தெரியவராததால் சந்திரிகா அரசின் நிலைப்பாடே நியாயமானது என்னும் எண்ணம் தோன்றக்கூடிய நிலை உள்ளது எனவும் கூறினேன். இந் நிலையில் யாழ்ப்பாணமே என்ன நிறம் என்று பல வருடங்களாக அறியாமல் இருக்கும் என் போன்றவர்களுடைய கருத்துக்களில் சிக்கல்கள் இருப்பது தவிர்க்கப்பட முடியாததே என்பதையும் சுட்டிக்காட்டினேன்.

''என்னை பாதாளச் சிறையில் போட்டு அடைத்து விடுவீர்கள் என்று நினைத்து வந்தேன். சிரித்துப் பேசுகிறீர்கள்'' என்றேன் தமிழ்ச்செல்வனிடம் அதற்கும் சிரிப்பு. இது முடிய யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க B. B C. தமிழோசைப் பொறுப்பாளரையும், என்னையும் பேசும்படி ஒரு கூட்டம் வளாகத்தில் ஒழுங்கு பண்ணியிருந்தது. பேசினேன். கேட்டிருந்த ஒரு பழைய நண்பர் சொன்னார் சந்திரிகாவின் அணுகு முறையைப் பற்றி அது மனிதாபிமான முகத்துடன் வரும் இனவாதம் — என்று.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## அல்பிறெட் செல்லத்துரை பஸ்தியாம்பிள்ளை

ஈச்சமோட்டை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அல்பிறெட் செல்லத்துரை பஸ்தியாம்பிள்ளை 14-3-95 அன்று காலமாகி விட்டார்.

இவர் காலம்சென்ற திரு. திருமதி - பெஞ்சமின் பஸ்தியாம்பிள்ளையின் அன்பு மகனும், ஜோசவ் பொன்னுத்துரை, திருமதி பலோமினா பொன்னுத்துரை (ஓய்வு பெற்ற ஆசிரியை புனித அந்தோனியார் கல்லூரி ஊர்காவற்துறை) ஆகியோரின் அன்பு மருமகனும், ஜொய்சியின் அன்புக் கணவரும், கிறிஸ்ரி அஜித்குமார் (புனித பத்திரிசியார் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன்], செறின்லுமினி [திருக்குடும்ப கன்னியர் மடம் ஆங்கில பாடசாலை], டில்சான் (புனித பெனடிற் கல்லூரி கொழும்பு], றொசான், டிலான் (புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. V. S. S. அகஸ்ரின் (இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர்) அவர்களின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல் 7 விதானையார் வீதி ஈச்சமோட்டை இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக இன்று [16-3-95) வியாழக்கிழமை மாலை 3.00 மணிக்கு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தகவல்
திருமதி. ஜொய்சி பஸ்தியாம்பிள்ளை
(மனைவி)
(35719)

## கணபதிப்பிள்ளை தில்லைநாதன்

[தம்பையா]

காரைநகர் சல்லையை பிறப்பிடமாகக் கொண்ட கணபதிப்பிள்ளை தில்லைநாதன் (தம்பையா) அவர்கள் காரைநகரில் சிவபதம் அடைந்து விட்டார்.

இவர் பாக்கியத்தின் அன்புக் கணவரும், அருளானந்தம் (U. K) சுப்பிரமணியம், [முகாமையாளர், தேவன் அன்சன்ஸ் வவுனியா], முருகமூர்த்தி (இத்தாலி), விக்கினேஸ்வரி, தர்மலிங்கம் [ஆசிரியர் யாழ்ற்ரன் கல்லூரி காரைநகர்] ஆகியோரின் அன்புத் தந்தையும, கணேசன், சிவதேவி (U. K), புனிதவதி ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவசுகந்தன், கிரிஜா, கோகுலன் (U. K) ஆகியோரின் அன்பு பேரனாரும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, வள்ளிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா, சிதம்பரம் ஆகியோரின் மருமகனும ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் காரைநகர் சாம்பலோடை மயானத்தில் நடைபெற்றன, இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
தி. தர்மலிங்கம்
(மகன்)
அரசடி சந்தி,
நவாலி
[35724)

## செல்லத்துரை சிவரெத்தினம

(நாரந்தனை)

வேலணையைப் பிறப்பிடமாகவும், நாரந்தனையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சிவரெத்தினம் 13-3-95 இல் மொன்றியல், கனடாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சிவமணியின் அன்புக் கணவரும், கனடாவில் வசிக்கும் லோகேந்திரன், லோகேஸ்வரி, சர்வேஸ்வரி, மகேந்திரன் ஆகியோரின் அருமைத் தந்தையும், திருஞானசம்பந்தர், கஜேந்திரன், ஐஸ்வரி ஆகியோரின் மாமனாரும், அஜந்தன், பாமினி, ஆர்த்திகா, ஜனார்த்வைஷ்ணவி ஆகியோரின் பேரனுமாவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் 15-3-95 அன்று கனடாவில் நடைபெற்றன இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்
திருமதி இ. சதானந்தன்
[மருமகள்]
25, பேரின்பநாயகம் ஒழுங்கை,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
(35717)

## கோபாலபிள்ளை பிரியதர்ஷன

சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும், தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கோபாலபிள்ளை பிரியதர்ஷன் 10-03-95 அன்று அகால மரணமானார்.

இவர் முத்துத்தம்பி கோபாலபிள்ளை - மகாதேவி ஆகியோரின் அன்பு மகனும், தயாநிதி, கலாநிதி, மதிவதனி, தனேஸ்குமார், ராஜ்குமார், பாலகுமார், ஜெயக்குமார் ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஆவார். இவ் அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:
திருமதி துரைச்சாமி.
[பெரிய தாயார்]
வண். வடமேற்கு,
ஆனைக்கோட்டை.
[35713]

## திருமதி பத்தினாதர் அன்னம்மா

நாரந்தனை தெற்கைச் சேர்ந்த பேதுறு பத்தினாதர் அன்னம்மா நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பேதுறு பத்தினாதரின் அன்பு மனைவியும், மரியாம்பிள்ளை, திரேசம்மா, ஜோன்பிள்ளை ஆகியோரின் அன்பு தாயாரும், மரியசாளெற், சாமிநாதன், இந்திராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், அருட்தந்தை அருள்நேசன், சங் சகோதரி நீலமினோ, பா. பேதுறுப்பிள்ளை (ஆசிரியர்) ஆகியோரின் பெரிய தாயாரும், ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16-3-95) பிற்பகல் 4 மணிக்கு யா/புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம. மரியாமபிள்ளை
(மகன்)
சவின் கலைகள் பயிலகம்.
238, பிரதான வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்
(35728)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 16 03 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## மாவுடன் ஹபரண இன்று வருகிறது

யாழ் பாணம், மார்ச் 16

திருகோணமலையிலிருந்து ஆயிரத்து 900 மெற்றிக்தொன் மாவுடன் ஹபரண கப்பல் இன்று பருத்தித்துறைக்கு வந்து சேரும்.

(ஒ 4)

## கரவெட்டி வாசி விபத்தில் பலியானார்

யாழ்ப்பாணம், மார்ச். 16

அல்வாய் மாலிசந்தியில் நேற்று இரு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார் மற்றும் இருவர் காயமடைந்தனர்.

மோட்டார்சைக்கிளை செலுத்திச் சென்ற கரவெட்டியைச் சேர்ந்த பொன்னம்பலம் சத்தியமூர்த்தி (வயது 48) என்பவரே மரணமானவர் ஆவார்.

தலையில் ஏற்பட்ட காயதினால் சுயநினைவிழந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சைக்குட்படுத்திய சில மணி நேரத்தில் அவர் அங்கு மரணமானார்.

இவர் திக்கம் வடிசாலையின் பொதுமுகாமையாளர் ஆவார்.

மற்றைய மோட்டார்சைக்கிளில் சென்ற இருவரும் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் காயங்களுக்கு சிகிச்சை பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-15-173)

## விளையாட்டு கழகங்களின் கலந்துரையாடல்

யாழ்ப் ாணம், மார்ச். 16

வலிகாமம் மேற்குவலயத்திற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுடனான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு சுன்னாகம் அரசியல்துறை வலிகாமம் கோட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் உடுவில், தெல்லிப்பளை, சங்கானை, சண்டிலிப்பாய் பிரதேசங்களைச் சேர்ந்த சகல விளையாட்டுக் கழகங்களின் நிர்வாக உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு கேட்டுள்ளது. (ஒ)

## புலிகள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விடுதலைப்புலிகள் பிரமுகர்களைசந்தித்துப்பேசுவார்கள்

இவர்கள் மூவரும் நேற்று நண்பகல் யாழ் பல்கலைகழகத்துக்கு விஜயம் செய்து துணைவேந்தர் மற்றும் பேராசிரியர்களைச் சந்தித்து நிலைமைகளைக்கேட்டறிந்தனர்.

உண்ணாவிரதம் இருக்கும் போர்க்கைதிகளையும் சென்று பார்வையிட்டனர்.

[அ-4-7]

## பெற்றோரின்...

விட்டனர்.

இளநீரையாவது அருந்துமாறு கேட்டு தனதுகைகளாலேயே ஒவ்வொரு கைதிகளுக்கும் இளநீரைப் பருககி விட்டார் ஆயர்.

இதறகிடையில் நீராகாரத்தை நிறுத்துவதற்கான காலக்கெடு இன்றுடன் முடிவடைந்த போதும் ஆயரின் வேண்டுதலில் பேரில் மேலும் ஒரு வாரத்துக்கு நீர் அருந்துவதென தீர்மானித்துள்ளதாக கைதிகள் தெரிவித்தனர் (ஒ-4 7)

## தமிழர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுக்களை அரசு விரைவில் ஆரம்பிக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது தீர்க்கப்படாத சில விடயங்கள் குறித்து அரசு சில முடிவுகளை எடுத்து பேச்சு வார்த்தையை ஆரம்பிக்கும் என்று நான் நம்புகிறேன் — இவ்வாறு அவர் சொன்னார் (அ 7)

## தென்பகுதியில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

புல்ல பகுதியில் தேடுதல் நடத்திய பொலிஸார் 6 துப்பாக்கிகளையும், பெருந்தொகையான ரி-56 ரவைகளையும் மற்றும் கொமாண்டோ சீருடைகளையும் கைப்பற்றியுள்ளனர். சந்தேகத்தின் பேரில ஐவர் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை—

அஹங்கமவின் 'ஓட்டோ' ஒன்றில சென்றவர்களை மறித்த பொலிஸார் சோதனை செய்தபோது பெருந்தொகையான ரவைகளை அவர்களிடமிருந்து கைப்பற்றினர். "ஓட்டோ"வில் வந்த நால்வரும் கைது செய்யப்பட்டனர். [ஐ]

# சமாதானம் பேசிக் கொண்டு---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

காதஒன்றாகும். அது எம்மை அதிர்ச்சியடைய வைத்திருக்கிறது.

ஆகவே இந்நிலையில் மிக விழிப்பாகச் செயற்படவேண்டியவர்களாக நாம் இருக்கின்றோம்.

நாம் அரசுடன் மூன்று கட்டப் பேச்சுக்களை நடத்தி முடித்துவிட்டோம். அந்தப் பேச்சுக்களில் நாம் பேசிய விவரங்கள் என்னவென்பதை பத்திரிகைகள் மூலம் நீங்கள் அவ்வப்போது அறிந்திருப்பீர்கள். பொது மேடைகளிலும் அவை பற்றி கூறியுள்ளோம்.

அரசிடமிருந்து ஒரு தெளிவான — திட்ட வட்டமான— பதிலை பெறவேண்டிய நிலையில் இருக்கிறோம்.

அரசு தானாக விரும்பி எமது மக்களுக்கான தீர்வை இப்பேச்சுக்களின் போது உண்மையில் வைக்கப்போகிறதா? அல்லது இங்கு சமாதான சூழ் நிலையை ஏற்படுத்தப் போகின்றோம் என்று கூறி, காலத்தைக் கடத்தி, தன்னை வலுப்படுத்திக் கொள்ள அரசு திட்ட மிடுகின்றதா?

இது குறித்து அரசின் தெளிவான பதில் எமக்குத் தேவை

இதற்காக —

எமக்கு அரசிடமிருந்து கிடைத்த பிந்திய கடிதத்துக்கு இரண்டொரு தினங்களில் உறுதியான பதிலை அனுப்பவிருக்கிறோம்.

### முதலில் வைத்த நிகழ்ச்சி நிரல்

ஆரம்பத்தில் பேச்சுக்கு வந்த போது — பேச்சுகளின் போது ஆராயப்பட வேண்டிய விடயங்கள் பற்றிய நிகழ்ச்சி நிரலை முதலில் முன் வைத்தது இலங்கை அரசு தான்

இனப்பிரச்சினை, அரசியல் தீர்வு குறித்து பேசுவதற்கு முன்னர் —

வடக்கில் வாழும் மக்களின் அன்றாட இன்னல்கள், அவலங்கள், பிரச்சினைகள், அவர்களுக்கு எதிரான தடைகள், ஆகியவை குறித்து நாங்கள் இருதரப்பினரும் பேசி அவற்றுக்கு தீர்வு கண்டு மக்களுக்கு முதலில் சுமுக வாழ்க்கை நிலையை ஏற்படுத்துவோம் என்று கூறித்தான் அரசு தனது முதல் கட்ட நடவடிக்கையை எடுத்தது

ஆனால் காலப் போக்கில்— இந்த மூன்று கட்டப் பேச்சுக்களில் அவை எவையும் எட்டப்படவில்லை. இந்த மூன்று கட்டப் பேச்சுக்களில் கிடைத்தலாபம் என்னவென்றால் "தாக்குதல் இடைநிறுத்தம்" மட்டும்தான்

இது விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை இராணுவத்துக்கும் இடையில் மோதல்களைத் தவிர்க்க வழி செய்ததே தவிர, எமது மக்களின் வாழ்க்கை நிலையில், தரத்தில் எந்த விதமான முன்னேற்றத்தையும் தரவில்லை.

நாம் முதலில் பேச எடுத்த விடயமே எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைதான்

மூன்று கட்டமாகப் பேசி, பேச்சுவார்த்தை மேசையில் எற்றுக்கொண்டு போன எந்த ஒரு திட்டமும் மாற்றங்களைத் தரவில்லை.

கடைசியாக நடந்த பேச்சின்போது பொருளாதாரத் தடை நீக்கம் குறித்து விவாதித்தோம்; தடை நீக்கப் படவேண்டிய பொருள்கள் எவை என்பன பற்றி கூறினோம்.

எரிபொருள் தடையை வைத்துக் கொண்டு — வேறு எந்தவிதத்தளர்வை ஏற்படுத்தினாலும் அதனால் பயனில்லை என்று கூறினோம்.

27 பொருட்களில் 22 பொருள்கள் மக்களுக்கு தேவை என்பதை உணர்வதாக பேச்சுக்கு வந்தவர்கள் கூறினர்; இரண்டொரு தினங்களில் அவற்றின்மீதான தடையை நீக்குவதாகக் கூறினார்கள். ஆனால் நடக்கவில்லை.

### பேச்சு மேசை எமக்கு நம்பிக்கையீனத்தை தருகிறது

பேச்சுவார்த்தை மேசை எமக்கு நம்பிக்கையீனத்தை தந்துள்ளது.

நாமும் ஒரு துரோகத்தை செய்தவர்கள் என்று வரலாற்றில் இடம்பெற்றுவிடக்கூடாது என்பதில் நாம் தெளிவாக இருக்கிறோம். நாளை எமது மக்களின் பேரழிவுக்கு நாங்கள் காரணமாக இருக்கக் கூடாது.

போராட்டம் இன்று இந்த உன்னத நிலைக்கு வந்தமைக்கு எமது போராளிகளின் தியாகம் மட்டுமல்ல, ஒட்டு மொத்தமாக எமது மக்களின் தியாகங்களும், அர்ப்பணிப்புக்களும் கூடக் காரணம்.

[illegible] இந்தப் போராட்டம் தான்.

இன்று நாம் பலம் பொருந்திய நிலைக்கு வந்துள்ளோம். விட்டுக் கொடுக்க முடியாது

இந்தளவு உயர்ந்த போராட்ட நிலையையும், வளர்ச்சி நிலையையும் உறுதியற்ற வாக்குறுதிகளுக்கு உறுதியற்ற தன்மைகளுக்கு விட்டுக் கொடுத்துவிட முடியாது

"தமிழருக்கு எதிரான பொருளாதாரத்தடையை நீக்கியுள்ளோம்; பொருள்கள் தாராளமாக வடக்கே அனுப்பப்படுகின்றன" என்று சிங்கள அரசு வெளி உலகுக்கு பொய்ப் பிரசாரம் செய்கிறது.

ஆனால் இங்கு அப்படி ஒன்றும் நடக்கவில்லை.

இதன் நோக்கம் என்ன?

உண்மையில் தமிழருக்கு உரிய தீர்வை வழங்க அரசு சிந்திக்கிறதா? அல்லது பிரசாரத்தைத்தான் தனது நோக்கமாகக் கொண்டிருக்கிறதா?

அரசின் இந்த நிலைப்பாடு தான் சிக்கலைத் தந்துள்ளது.

### சண்டையைத் தொடக்க அரசாங்கம் முயற்சி

சண்டையை தொடக்க அரசு முனைந்து நிற்கிறது.

இது இங்குள்ள மக்களுக்கு தெரியாவிட்டாலும் கிழக்கு மக்களுக்கு நன்கு தெரியும்.

கிழக்கில் படை முகாம்களில் துருப்புக்கள் குவிக்கப்பட்டு. பயிற்சி அளிக்கப்படுகிறது; வீதிகள் தடை செய்யப்பட்டு சண்டைக்கான பயிற்சிகள் நடக்கின்றன; இராணுவ முகாம்களுக்கு அமைச்சர் சென்று படையை உற்சாகப் படுத்துகிறார்.

தாக்குதலுக்கான புதிய புதிய ஒழுங்கமைப்புக்கள் நடக்கின்றன இராணுவம் புனரமைக்கப்படுகின்றன.

இவை எல்லாம் ஏன்?

சந்திரிகா அரசு நிதி நிலையில் மோசமாக உள்ளது. அந்த நிலையிலும் தன்னைப் பலப்படுத்த எம்மை கருவியாக்க அரசு திட்டமிடுகிறது.

எமது பிரச்சினையை தீர்க்க வேண்டுமானால் — நாம்கேட்பது சிறிய விடயம்.

இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வை நாம் இன்று கேட்கவில்லை. மக்களின் அன்றாடப்பிரச்சினை பற்றித் தான் முதலில் கேட்கிறோம்.

நாளாந்த வாழ்க்கையில் எமது மக்கள் எதிர்கொள்ளும் இன்னல்களை தீர்க்குமாறு கேட்கிறோம்.

### அரசியல் பேச்சு இழுபடக் கூடியது

அரசியல் பேச்சு என்பது இழுபடக்கூடியது

அரசியல் பேச்சுக்கு திட்டம் தருவார்கள். அதை நாம் பரிசிலனை செய்ய வேண்டியிருக்கும். அது நீண்டு கொண்டு போகும்.

இந் நிலையில்—

விடுதலைப்புலிகளின்கைகள் கட்டப்பட்ட நிலையில் பேச்சு நடத்துவது எமது பலவீனமாகும். இது எம்மை மட்டுமல்ல ஒட்டு மொத்தமாக எமது மக்களையே நாளைக்கு பலவீனப்படுத்திவிடும்.

### விரைவில் முடிவு

ஆகவே இந்த விடயத்தில் நாம சரியான ஒரு முடிவை எடுக்கவேண்டியுள்ளது மிக விரைவில் அது தொடர்பான முடிவை எடுப்போம்.

உறுதியான எமது பதிலை அரசுக்குத் தெரிவிக்க வேண்டிய நிலை உள்ளது.

பாதை திறப்பு. பொருளாதாரத் தடையை முற்றாக நீக்கல், கிழக்கில் விடுதலைப் புலிகள் நடமாட்டம் ஆகியவை சம்பந்தமானவையெல்லாம் தங்கள் தேசிய பாதுகாப்பு நலனுடன் சம்பந்தப்பட்டிருப்பதால் அவற்றை இப்போது பேசித் தீர்க்க முடியாது; அரசியல் பேச்சுடன் சேர்ந்தே பேச முடியும் என்று அரசு பதில் தந்துள்ளது.

நாங்களும் அரசுக்கு உறுதியான பதில் அனுப்பத்தான் போகிறோம்.

இந்த இக்கட்டான சூழ் நிலையில் நாங்கள் மிக விழிப்பாக இருக்கவேண்டும்.

ஒன்றில அரசு உறுதியான சமாதானத்தை கொண்டு வருவதற்கான முடிவை எடுக்கவேண்டும்.

இல்லாவிட்டால் ஏற்கனவே இருந்த நிலைக்குப் போக வேண்டும்.

எமது மக்களின் வாழ்க்கை நிலையை சிந்திக்காது தமது இராணுவத்தின் நலனை மையமாகக் கொண்டே சகல தீர்மானங்களையும் அரசு எடுக்கிறது இது எங்களை பலவீனமாக்கும்.

வரலாறு கற்றுத்தந்த பாடத்தை நாம் பின்னோக்கிப் பார்த்து செயற்பட வேண்டிய நிலையில் உள்ளோம் நாம் பலமான நிலையில் நிற்கிறோம். இந்நிலையில் அரசு எமக்குரிய தீர்வைத்தரவேண்டும்.

எமது உரிமைப் போராட்டத்தில் விட்டுக் கொடுக்க முடியாது

ஒருபக்கம் ஜனாதிபதி சமாதானம் பற்றி பேசுகிறார். மறுபக்கம் சிங்கள மக்களை திருப்திப்படுத்தவும், இராணுவத்தை திருப்திப்படுத்தவும் செயல்கள் நடக்கின்றன.

நாங்கள் யுத்தத்தை விரும்பி ஏற்றுக் கொண்டவர்கள் அல்லர்; இந்தப் போராட்டம் எமது இனத்துக்கானது. மக்களின் வாழ்க்கைக்கானது.

யுத்தம் என்பது எம் மீது திணிக்கப்பட்ட தொன்று; இதன் மூலம் உரிய தீர்வைத் தான் காணவேண்டுமே தவிர நாங்கள் அரசின் உறுதியற்ற வாக்குறுதிகளை வைத்துக் கொண்டு போராட்டத்தை பலவீனப்படுத்த முடியாது.

அழிவற்ற — அமைதியான தீர்வை — நாம் விரும்புகிறோம். இதற்காகவே சந்திரிகா அரசுக்கு சந்தர்ப்பம் ஒன்றை வழங்கினோம்; அதற்காகப் பேசினோம்.

1977 ஆம் ஆண்டில் எமது மக்கள் தனிநாடு காண அங்கீகாரம் வழங்கிவிட்டார்கள்! மக்கள் எப்போதோ தீர்மானித்துவிட்டனர்.

ஏதாவது ஒரு வழியில் பேச்சை குழப்பி, பேச்சுக்களை விடுதலைப் புலிகள் குழப்பி விட்டனர் என்ற நிலையை ஏற்படுத்த அரசு இன்று முயற்சிக்கிறது.

பேச்சில் இணங்கியதை செய்ய மறுப்பது தான் அரசின் போக்கு

திரும்ப யுத்தத்தை கொண்டுவர அரசு தான் காரணம், நாம் அல்ல, நாம் யுத்தத்தை விரும்பவில்லை.

அமைதியான சூழ்நிலையில் அரசியல் தீர்வு ஏற்பட — மக்களின் உரிமைகளை வழங்கக் கூடிய தீர்வை கொண்டுவர— வேண்டிய கடமை அரசின் பக்கம் தான் உள்ளது.

நாம் சலுகைகள் கேட்கவில்லை, எமது உரிமையைத் தான் கேட்கிறோம்.

ஆகவே இன்றைய அரசியல் சூழ் நிலையில் அவதானமாக அடி எடுத்து வைக்க வேண்டியுள்ளது.

—இவ்வாறு அவர் கூறினார். (உ-3)

## மகர யாழ்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பட்டவரின் பெயரை இன்று காலை 10 மணிக்கு அகில இலங்கைக் கம்பன் கழகத்தில் வைத்து கம்பன் கழக அறிஞர் குழு பத்திரிகையாளர்களுக்கு அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

[உ]

உ

அருள்மிகு

நெல்லியடி தடங்கன் புளியடி

முருகமூர்த்தி ஆலய

மணவாளக்கோல விழா

17-03-1995 வெள்ளிக்கிழமை

காலை 8-00 மணிக்கு:
1008 சங்காபிஷேகம், ஸ்நபன அபிஷேகம் கிரியைகளுடன்.

மாலை 4-00 மணிக்கு:
நாதஸ்வரக் கச்சேரி
V.K. கானமூர்த்தி - பஞ்சமூர்த்தி குழுவினர்
T. உதயசங்கர் - R கேதீஸ்வரன் குழுவினர்

மாலை 5-00 மணிக்கு:
தெய்வீகப் பேருரை
திரு. இ. ஜெயராஜ்
(அ.இ.க.க. அமைப்பாளர்)

இரவு 6-45 மணிக்கு:
விசேட நாதஸ்வர, தவில் கச்சேரி

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| திரு. V K பஞ்சமூர்த்தி | திரு. T. உதயசங்கர் |
| திரு. R. கேதீஸ்வரன் | திரு. N. சிவகுமார் |

இரவு 9-30 மணிக்கு:
கெஞ்சிற் கச்சேரி

| | |
|---|---|
| நாதஸ்வரம் | திரு. V.K. பஞ்சமூர்த்தி |
| தவில் | திரு N. சிவகுமார் |
| வயலின் | திரு. R. ராதாகிருஷ்ணன் |
| மிருதங்கம் | திரு. K. கண்ணதாசன் |
| கெஞ்சிரா | திரு. சதாவேல்மாறன் |
| கடம் | திரு. எழிலழகன் |

இரவு 11-45 மணிக்கு:
பூந்தண்டிகையில் சுவாமி வெளிவீதியுலா.

ஆனந்த ஆட்டக்காவடி காலை 6-30 மணியளவில் நவிண்டில் குலனையம்பதி விநாயகர் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகும்.

அனைவரும் வருக; அருளமுதம் பெறுக!

ஆலய பரிபாலன சபையினர்

(35726)

# மரண அறிவித்தல்கள்

## பொ. சத்தியமூர்த்தி

(பொது முகாமையாளர் வடமராட்சி ப. தெ. வ. அ. கூ. சங்கம் கொத்தணி)

பொ. சத்தியமூர்த்தி [பொது முகாமையாளர் வடமராட்சி ப. தெ. வ. அ. கூ. சங்கம் கொத்தணி] நேற்று இரவு அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்
செ. பாலா
கரவெட்டி.
(35727)

## திருமதி குணசிலன் அமலசீலி கர்வாலோ

(அமலம்)

குணசீலன் கர்வாலோவின் அன்பு மனைவி அமலசீலி நேற்று மாலைதீவில் காலமானார்.

இவர் சுதர்சினி, சுரேஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு திருமதி. S. M. பெர்னான்டோ அவர்களின் அன்பு மகளும், சிறீமதி, யோகம், சகாயராஜ். கெமிலா, கில்டா ஆகியோரின் அன்புச் சகோதரியும ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
S. M பெர்னான்டோ
(சகாயறாஜ்)
(கி-768)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org